www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஆகஸ்டு - 2002
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



குஜராத்:
கல்லறைகளுக்கு
இடையில்
ஒரு வாழ்க்கை



# ஆன்மீகப் பெருச்சாளிகள்

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

★ இப்போது அனைத்து மக்களுடைய அன்றாட நிகழ்ச்சி நிரலில் சின்னத் திரையின் தொடர்கள் தவிர்க்க முடியாமல் இடம் பெறுகின்றன. இரவு நேரச் சாப்பாட்டின் போது 'அலைகள்' பார்க்கிறேன். பல வீடுகளில் ஆர்த்தி தொடரை மீறி 'சன் செய்திகள்' கேட்பது பெரிய போராட்டமாக இருக்கிறது.

''முன்னோக்கிச் செல்லும் சமூகத்தை எவையெல்லாம் பின்னுக்கு இழுக்கின்றதோ அவையெல்லாம் ஆபாசம்'' என முன்னொருமுறை பு.க.வில்தான் படித்துள்ளேன். இதன் அடிப்படையில் தொடர்களெல்லாம் ஆபாச வகையறாக்களாய்த்தான் இருக்கின்றன. தொடர்களின் பிடியிலிருந்து நம் மக்கள் விடுபட ஒரு விரிவான கட்டுரை சமகால அவசியம். பரிசீலியுங்கள்.

இப்போதெல்லாம் புத்தகக் கடைகளுக்குச் சென்றால், பளபளவென வடிவ அளவில் மிக அருமையாக, புதிது புதிதான எழுத்தாளர்களுடைய புத்தகங்கள் கண்ணில் படுகின்றன. இவற்றில் நல்ல புத்தகங்களைக் கண்டுபிடிப்பது, முத்துக் குளிப்பதை விட மிகச்சிரமமானது. நல்ல கவிதைப் புத்தகம் படித்துப் பல காலமாகி விட்டது. பு.க.வில் தொடர்ச்சியாய் அறிமுகப்படுத்துங்கள். ஒரு புத்தகம்தான் அறிமுகப்படுத்துவோம் என ஏன் பிடிவாதம் பிடிக்கிறீர்கள் என்று புரியவில்லை. இதில் திடீர் திடீரென அந்தப் பகுதி காணாமல் போய்விடுகிறது.

இதிலும் குறிப்பாக அரசியல் புத்தகம் படிப்பதற்குத்தான் தோழர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். எனக்கென்னவோ அரசியலும், இலக்கியமும் இரண்டு தண்டவாளங்கள். ஒன்றுக்கொன்று, இணையாகச் சென்றால்தான் நாம் நம்மை வறண்டு போகாமல் இருக்கச் செய்ய முடியும் எனக் கருதுகிறேன். துன்பப்படுகிற மக்களைப் பார்த்து ஏதாவது செய்தாக வேண்டும் என ஈரத்தோடு உள்ளே வருகிறவர்கள், எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் அறிவு ரீதியாக அறிந்து கொண்ட பிறகு நெஞ்சில் இருந்த ஈரம் வற்றி விடுகின்றது. இந்த ஈரம் வற்றாமல் பாதுகாப்பது என்னைப் பொறுத்தவரையில் இலக்கியங்கள்தான். அதற்காகத்தான் இத்தனை ஆதங்கம்.

மாத இதழை மாதம் இரண்டாக்கி, நான்காக்கி தினசரி நாளிதழாய் மாற்றுவதுதான் நம்முடைய ஏட்டின் இலக்காக இருக்க முடியும் என்று கருதுகிறேன். பத்திரிகைத் துறையில் நமக்குப் பலகாலம் அனுபவம் உண்டு. இத்தனை ஆண்டுகள் கழிந்தும் சரிவுகளுடனும் இதழ் வெளிவந்தால் அது இன்னும் கொஞ்சம் சிக்கல். நெருக்கடியான இக்கால கட்டத்தில், பிரச்சினைகளை விளக்க, விவாதம் செய்ய நம்முடைய பத்திரிகைகள்தான் பிரச்சாரக் கருவி. ஆகையால் எவ்விதத் தடங்கல்களும் வராத அளவிற்குத் திட்டமிடுவதும், முறைப்படுத்துவதும்தான் சரியாக இருக்க முடியும் என்று கருதுகிறேன்.

வாசகன் என்ற முறையில் வேறு என்ன நான் சொல்ல!

**— சாக்ரடீஸ், மதுரை.**

★ அழகி பட விமரிசனம் படித்தேன். ஒரு நல்ல படத்தை இப்படிக் குறை கூறியிருக்கிறார்களே என முதலில் எரிச்சலாக இருந்தது. இல்லை, அந்தப் படத்தின் மீது உள்ள இரசிப்பிலிருந்து இதைப் படிக்கிறோம், முழுமையாகப் புரிந்து படிக்க வேண்டும் என இரண்டாம் முறை நிதானமாகப் படித்தேன். விழுங்க கசப்பாக இருந்தாலும் உங்கள் விமரிசனம் உண்மை எனப் புரிந்து கொண்டேன்.

**— சுகுணா தேவி, சமயநல்லூர்.**

★ ஜூன் 2002 பு.க. பலரையும் பேச வைத்தது. சி.பி.எம். தோழர்கள் உட்பட பல்வேறு பிரிவினரும், பு.க வாசகர்களும் 'அழகி' விமரிசனக் கட்டுரையைப் பாராட்டினர். காதலிக்கோ, ஊர்க்காரிக்கோ, ஏழைப் பெண்ணுக்கோ உதவ முன்வரும் சண்முகம் மனைவியிடம் உண்மை பேசாமல் மறைப்பது யதார்த்தம் அல்ல, அயோக்கியத்தனம். சண்முகம் நிலையில் உள்ள ரசிக சண்முகங்கள் வாழ்க்கையில் நடிக்கிறார்கள் என்பதைக் கட்டுரை அலசியிருக்கிறது. நடவடிக்கையும், சம்பவமும், செயலும்தான் ஒருவனை நல்லவனா, கெட்டவனா என்று காட்டுமே தவிர பொதுவாக அவன் எண்ணம் நல்லெண்ணம் என்பது - நல்லெண்ணப் பயணம், மரியாதை நிமித்தம் சந்திப்பு, வாஜ்பாய் நல்லவர் - இப்படி நல்லெண்ணம் கொண்ட அயோக்கியர்களின் யோக்கியதையை விளங்கிக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்த இக்கட்டுரையை மறுப்பவர்களின் கருத்தறிய ஆவலாக உள்ளது.

**– விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலை வட்டம்.**

★ *உதயன்* என்ற அந்த உயிரோவியம் மறைந்தது மிகப்பெரிய இழப்பே. சீரழிவில் மலிந்த இந்த அரசியல் அதிகார வர்க்கத்தைத் தன் தூரிகையால் எதிர்த்து வந்த இக்கலைஞன் என்றும் போற்றப்பட வேண்டியவன்.

**— ம.க.இ.க., திருச்சிக் கிளை.**

## சென்னை வாசகர்கள் கவனத்திற்கு

**பத்திரிக்கையைப் படிப்பது, பயன்படுத்துவது பற்றி மாதந்தோறும் ஒரு கலந்துரையாடல் - சென்னை *புதிய கலாச்சாரம்* வாசகர் வட்டம் நடத்துகின்றது. பங்கேற்க விரும்பும் வாசகர்கள் எமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.**

# 'பகத்சிங் புத்தகப் பயணம்' ஆரம்ப விழா

இந்திய இளைஞர்களின் முன்னோடியான பகத்சிங்கின் பெயரிலே இந்நூல் விற்பனையகம் 13.07.2002 அன்று திருச்சியிலே ஆரம்பிக்கப்பட்டது. திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தோழர். துரை சண்முகம், (கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை) தலைமை தாங்கினார். ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர். காளியப்பன் உலகமயமாக்கத்தை எதிர்க்கும் இவ்வாண்டு மே தின உரைப்பேழைகளை அறிமுகம் செய்து பேசினார்.

புதிய கலாச்சாரம் வெளியீடான **இசை: ஓய்வு, பொழுதுபோக்கு, போராட்டம்** நூலை முனைவர் மு. இளமுருகனும் (பாரதிதாசன் பல்கலைக்கழகம்), **இந்திய அரசியல் சட்டம் மதச்சார்பற்றதா** நூலை வழக்கறிஞர் பானுமதியும், **கண்ணை மறைக்கும் காவிப் புழுதி** நூலை முனைவர் அரங்க. சுப்பையாவும் (கரந்தை கலைக்கல்லூரி, தஞ்சை) அறிமுகம் செய்து பேசினார்கள். இறுதியாக வழக்கறிஞர் போஜகுமார் நன்றியுரையுடன் விழா முடிந்தது. புதிய சமூகத்தைப் படைப்பதற்குத் தேவையான அறிவுலக ஆயுதங்களுடன் 'பகத்சிங் புத்தகப் பயணம்' தனது நெடு பயணத்தைத் தொடங்கியது.

முற்போக்கு நூல்கள், பத்திரிக்கைகள், ஒலிநாடாக்கள், குறுந்தகடுகள் தேவைப்படுவோர் திருச்சியில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**பகத்சிங் புத்தகப் பயணம்,**
**21-C, NNN கட்டிடம் முதல்தளம்,**
**காஜா மியான் தெரு,**
**பாலக்கரை, திருச்சி - 8.**



படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 2 - 3
• ஆகஸ்டு - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# வைகோ: ஒரு சந்தர்ப்பவாதி அரசியல் அநாதையானார்!

மதுரை திருமங்கலத்தில், கடந்த ஜூன் 29-ந் தேதி பொதுக் கூட்டத்தில் ஈழவிடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்துப் பேசினார்கள் என்பதைக் காரணமாகக் காட்டி மதிமுக நிறுவனத் தலைவர் வைகோ உட்பட அக்கட்சியின் முக்கியப் பிரமுகர்கள் ஒன்பது பேர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் - ''பொடா''வின் கீழ் வழக்குப் போடப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். ''பொடா'' சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வது அச்சட்டப்படியே தண்டிக்கப்பட வேண்டியதுதான் என்று ஜெயா - சோ, காங்கிரசு என்று ஒரு பிரிவு பாசிஸ்டுகளும் அவர்களின் பாதந்தாங்கிகளும் நியாயப்படுத்துகின்றனர். அத்வானி முதலிய இன்னொரு பிரிவினர் இதை மறைமுகமாக ரசிக்கின்றனர்.

இந்தப் ''பொடா'' கைதுகளுக்குக் கண்டனமோ, எதிர்ப்போ தெரிவிப்பவர்களில், கடைந்தெடுத்த பிழைப்புவாத அரசியல்வாதிகள் தவிர, புலி ஆதரவு, தமிழினவாதக் குழுக்கள் உட்பட 'எவருமே முழுமனதுடன் தடங்கல் - தடுமாற்றமின்றிக் கண்டனம் தெரிவிக்கவில்லை. அவ்வளவு தூரம் மிக மோசமான சந்தர்ப்பவாதச் சகதியில் விழுந்து புரண்டவர் வைகோ. இந்த வகையில் தன்னைத்தானே அம்பலப்படுத்திக் கொள்வதற்கு போலிக் கம்யூனிஸ்டுகள், கருணாநிதி - அண்ணாதுரை போன்றவர்களுக்கு பல ஆண்டுகள் பிடித்தன. ஆனால், புதிய தலைமுறைத் தலைவர்களான இராமதாசு, வைகோ, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்றவர்கள் ''கட்சி வைத்து அரசியல் செய்ய'' ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே இதைச் சாதித்து விட்டனர். மற்றவர்கள் தமது சமூக சாதி பின்னணியை மூலதனமாக வைத்து அரசியல் செய்கிறார்கள் என்றால் வைகோவின் அரசியல் மூலதனம் வெறும் வாய்ச்சவடால் மட்டும்தான்!

அறிவுத்தளத்தில் சந்தைச்சினிமா தரத்துக்கு இணையான நக்கீரன் ஏட்டின் கேள்விக்குக் கூட தனது அரசியல் சந்தர்ப்பவாதங்களை வைகோவால் நியாயப்படுத்த இயலவில்லை. ''பாரதீய ஜனதா கட்சி - அதிமுக கூட்டணிக்கு நீங்கள் ரொம்ப முயற்சி செய்ததாக சைதை இடைத் தேர்தல் கூட்டத்தில் இல. கணேசன் சொன்னார். ஜெயலலிதா மீது ஊழல் சேறு இருந்த நேரத்தில் கூட்டணியை ஏற்படுத்தி டெல்லியில் ஜெயலலிதாவுக்குச் செல்வாக்கை ஏற்படுத்தியது நீங்கள்தான். 2001 சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் தனித்துப் போட்டியிட்டு ஜெயலலிதா முழு மெஜாரிட்டியுடன் வெற்றிபெற வழிவகுத்ததும் நீங்கள்தான். இப்படி நீங்கள் செய்ததற்கான பரிசாக இதை நினைக்கிறீர்களா?'' என்ற நக்கீரன் ஏட்டின் கேள்விக்கு வைகோவின் வழக்கமான வாய்ச்சவடால் மட்டுமே பதிலாக வந்தது. திராவிட இயக்கத்தின் ''மறுமலர்ச்சி'' என்று சவடாலடித்துக் கொண்டு இந்துமதவெறி பாசிசச் சக்திகளுடன் கூட்டு வைத்தார். ஜெயலலிதாவின் ஊழலுக்கு எதிராக நடைப்பயணம் போனவர் அவருடன் விருந்துண்ண போயசு தோட்ட வாயிலில் காத்துக் கிடந்தார். அவர் விட்டெறிந்த ''சூட்கேசு''களைக் கவ்விக் கொண்டு வாலாட்டினார். வைகோ விசுவாசிகள் தீக்குளிக்கக் காரணமாக இருந்த அதே கருணாநிதியுடன் கூட்டு வைத்துக் கொண்டு தந்தை - மகன் உறவு கொண்டாடி மகிழ்ந்தார். இன்று ஈழத் தமிழர் நலனுக்காகத்தான் கட்சி நடத்துவதாகவும், மைய அரசில் பங்கேற்பதாகவும் சவடாலடிக்கிறார்; அப்படியானால் மேற்கண்ட சந்தர்ப்பவாதக் குட்டிக்கரணங்கள் யாருடைய நலனுக்காக? இப்போதும் ''பொடா''வையும் ஆதரிப்போம், புலிகளையும் ஆதரிப்போம் என்கிறாரே இது யாருடைய நலனுக்காக?

பெரியாரியத்தை ஏற்றுக் கொண்டுள்ள தற்போதைய திராவிட - தமிழினவாதக் குழுக்கள் - அமைப்புகள் எல்லாமே ஏதாவது ஒரு வகையில் சந்தர்ப்பவாதத்தைக் கொண்டுள்ளன. கருணாநிதி, வைகோ, வீரமணி, ராமதாசு மட்டுமல்ல, எம்.ஜி.ஆர்., பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கூட திராவிட இயக்கத்தின் பெயரால் அரசியல் நடத்த முடிகிறது என்றால், இவர்களின் முன்னோடிகளான பெரியார், அண்ணா துரை ஆகியோரே அதற்கு வழிகாட்டிகளாக இருந்ததுதான் இதற்கு அடிப்படை. பிரிட்டிசு காலனிய அரசு அடக்குமுறையை ஏவியபோது, ''கொள்கையா இயக்கமா என்று கேட்டால் கொள்கையைவிட அமைப்புதான் முக்கியம் என்பதால் ஈரோடு திட்டத்தைக் கைவிடுகிறேன்'' என்று அறிவித்தார் பெரியார். இந்திய - சீனப் போரின்போது, பிரிவினைவாதத் தடைச் சட்டம் வருவதாக நேரு அரசு மிரட்டியபோது பெரியாரைப் போலவே காரணங்கூறி திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டார், அண்ணாதுரை. இவ்வாறு, கொள்கையைத் துறந்தாவது வெறும் அமைப்பைக் காத்துக் கொள்ளும் நோக்கத்தில் செயல்படும் அடிப்படையை திராவிட இயக்கம் பெற்றது. அடுத்து, ஒடுக்கப்பட்ட சமூகம் முன்னேற வேண்டுமானால், அச்சமூகத்தின் தனிநபர் அல்லது குடும்பம்

படிப்பகம்

www.padippakam.com

பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும், அதன் மூலம் அச்சமூகம் விடுதலை உணர்வுபெறும் என்கிற ஒருவகை பிழைப்புவாதத்தையே சமூக நீதியாகக் கொண்டது, பெரியாரியம். அடுத்து, எதிரிகளில் ஒரு பிரிவின் நிழலில் - துணையில் நின்று கொண்டு இன்னொரு பிரிவை எதிர்த்து சவடால் அரசியல் பேசுவது என்ற உத்தி. பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பே பெருநிலப்பிரபுக்கள் - மிட்டா மிராசு, ஜமீன்தாரர்கள் மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதரவு நிலையில் நின்று கொண்டுதான் நடந்தது. திராவிடர் கழக மாநாட்டில் அண்ணாதுரையே இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக, எம்.ஜி.ஆர். தனிக் கட்சி வைத்ததும் கருணாநிதியின் தலைமையிலான மாநில அரசுக்கு எதிராக மைய அரசிடம் மனுக் கொடுப்பதும், மாநில அரசை மிரட்டுவதும் வழக்கமாகிப் போனது. பின்னர் கருணாநிதியும் இதே உத்தியைக் கடைப்பிடித்தார். ''இதோ மைய அரசுப் பிரதிநிதி வருகிறார், நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்'' என்கிற வதந்தி, பீதியை வைத்து அரசியல் நடத்துவது வாடிக்கையானது. இவர்களோடு ஜெயலலிதா மட்டுமல்ல, வீரமணி, ராமதாசு, வைகோ முதல் திருமாவளவன், கிருஷ்ணசாமி வரை மத்தியிலோ, மாநிலத்திலோ அதிகாரத்தில் இருப்பவர்களிடம் உறவு வைத்துக் கொண்டு சவடாலடிப்பதுதான் ஓட்டுக் கட்சி அரசியல் என்றாக்கி விட்டார்கள். இவர்கள் புலி ஆதரவு அரசியலே அந்தப் பலத்தில்தான் கட்டப்பட்டுள்ளது. தற்போது இத்தகைய அரசியல் தந்திரம் வைகோவின் காலை வாரிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

சந்தர்ப்பவாத அரசியல் வைகோவை அரசியல் அனாதையாக்கிவிட்டது. ''பொடாவையும் ஆதரிப்போம், புலிகளையும் ஆதரிப்போம்'' என்கிற வைகோவின் நிலைக்கு ராமதாசு தவிர வேறு யாருமே ஆதரவு தெரிவிக்கவில்லை. வைகோவின் கைதைக் கண்டிக்கும் போலி கம்யூனிஸ்டுகள், முலயம்சிங் மற்றும் வைகோவின் அரசியல் கூட்டாளிகள் கூட அதை ஏற்கவில்லை. தான் உறுதியாக ஆதரிக்கும் ''பொடா'' சட்டம் தன் மீதே ஏவிவிடப்படும் என்பதைக் கூட அறியாத அளவுக்கு அர[illegible]ல் ஞானசூனியமாகவா வைகோ [illegible]ந்தார்?

[illegible]ல்லை, எந்த அளவுக்கு மைய அர[illegible] தலைமை தாங்கும் பா.ஜ.க. - [illegible]எஸ். கும்பலுக்கு விசுவாசமாக [illegible]ரோ, எந்த அளவுக்கு அக்கும் [illegible]மதவெறி பார்ப்பன - பாசிசச் செயல்களை நியாயப்படுத்தித் துணை நிற்கிறாரோ, எந்த அளவுக்கு ''பொடா'' உட்பட அரசு பயங்கரவாதத்தை ஆதரிக்கிறாரோ அந்த அளவு தமது விடுதலைப் புலிகள் ஆதரவு நிலையைக் கண்டு கொள்ள மாட்டார்கள் என்று நம்பினாரா? ஆம். அப்படித்தான். வைகோ மட்டுமல்ல, விடுதலைப் புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கூட இத்தகைய அணுகுமுறைத்தான் வைக்கிறார்கள். இந்திரா காலம் முதல் வாஜ்பாயி ஆட்சி வரை.இந்தியாவின் புவிசார் நலன்களை ஏற்பதாக உறுதி கூறுவதுடன் இந்திய அரசுக்கும் அரசுத் தலைவர்களுக்கும் வலிந்துபோய் ஆதரவும், பாராட்டும், விசுவாசமும் காட்டுகின்றனர்.

''பொது மேடைகளிலும், நாடாளுமன்றக் கூட்டங்களிலும் வாஜ்பாயியின் தளபதியாக முழங்கியவர் வைகோ, அத்வானியின் இதயத் துடிப்பாகச் செயல்பட்டவர் வைகோ'' என்றும்

ஜெயலலிதா மட்டுமல்ல, வீரமணி, ராமதாசு, வைகோ முதல் திருமாவளவன், கிருஷ்ணசாமி வரை மத்தியிலோ, மாநிலத்திலோ அதிகாரத்தில் இருப்பவர்களிடம் உறவு வைத்துக் கொண்டு சவடாலடிப்பதுதான் ஓட்டுக் கட்சி அரசியல் என்றாக்கி விட்டார்கள். இவர்கள் புலி ஆதரவு அரசியலே அந்தப் பலத்தில்தான் கட்டப்பட்டுள்ளது.

அப்படிப்பட்டவருக்கு வாஜ்பாய் - அத்வானி ஆகியோர் நம்பிக்கை துரோகம் செய்கின்றனர் என்றும் புலிகளின் ஆதரவாளர்களின் ஒரு பிரிவினர் பொங்குகின்றனர். ''வைகோ பார்ப்பனிய இந்துத்துவா முகாமில் தளபதியாக விளங்குகிறார்'', குஜராத்தில் 2000 இசுலாமியர்களை பா.ஜ.க. ஆட்சி கொன்று குவித்ததை நியாயப்படுத்தியவர், ''ஈழ மக்களின் தன்னுரிமையை ஆதரிக்கும் வைகோ காசுமீர் மக்களின் தன்னுரிமையை எதிர்த்து பா.ஜ.க. படை வரிசையில் அணிவகுத்து நிற்கிறார்'' என்றெல்லாம் ஒப்புக் கொள்ளும் இன்னொரு பிரிவு புலி ஆதரவாளர்கள் ''வைகோ அரசியல் ரீதியாக பழிவாங்கப் பட்டிருக்கிறார்'' என்றும் கூறுகின்றனர்.

இன்னமும் வைகோ மற்றும் ராமதாசு கட்சிகளின் நிலை என்ன? வைகோ மீது ''பொடா'' சட்டம் ஏவிவிடப்பட்டதற்கு சில காரணங்களைக் கூறுகின்றனர். அரசியல் ரீதியாகப் பழிவாங்குவதற்காக இப்படிச் செய்துவிட்டார்; அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்காக ''பொடா'' சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்; தனது தவறுகளை மறைக்கவும் மக்கள் பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவும் இப்படிச் செய்கிறார்; ஜெயலலிதாவை மிகக் கடுமையாகத் தாக்கி வைகோ விமரிசனங்கள் செய்து வருகிறார். இதனால் ஆத்திரமுற்ற ஜெயலலிதா பழிவாங்குகிறார் என்று கூறுகின்றனர். இந்த வாதங்கள் அனைத்தும் அடிப்படையில் ''பொடா'' சட்டம் சரியானது, அவசியமானது, ஜெயலலிதா அதைப் பயன்படுத்தும் விதம் மட்டுமே தவறானது என்பதுதான்.

இந்த அடிப்படையிலேயே வேறு சில கருத்துக்களும் செய்தி ஊடகங்களில் அலசப்படுகிறது. வைகோவும், ஜெயலலிதாவும் இரகசிய பேரம் நடத்தி நாடகமாடுகின்றனர்; ஜெயா மீதான வழக்குகளில் வைகோ உதவ மறுத்ததால் பழி வாங்குகிறார். மத்திய அரசிடம் சில காரியங்களைச் சாதிப்பதற்காகவோ, மத்திய அரசைத் தர்ம சங்கடத்துக்குள்ளாக்கவோ வைகோவைப் பலிகடா ஆக்குகிறார்; ஸ்டாலின் பிரபலமாவதைத் தடுத்துத் திசைதிருப்ப இப்படிச் செய்கிறார் என்று பல ஊகங்கள் உலவுகின்றன. இவை அனைத்துமே, ''பொடா''வில் வைகோ கைது செய்யப்பட்டதற்கு ஜெயலலிதாவுக்குள்ள உள்நோக்கம் பற்றியவைதாம்.

இதைவிட முக்கியமானது, ''தடா'' சட்டமே நீட்டிக்கப்பட வேண்டும் என்று போராடிய பா.ஜ.க. - சிவசேனா போன்ற இந்துமதவெறியர்கள் மத, இனச் சிறுபான்மையினரை மட்டுமல்ல, உலகமயமாக்கம் - தனியார்மயம் - தாராளமயம் ஆகிய மறுகாலனியாக்கத்தை எதிர்க்கும் உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வந்த பாசிசக் கருப்புச் சட்டம்தான் ''பொடா''. பயங்கரவாத, பிரிவினைவாதப் பீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடும் பார்ப்பன - பாசிச உத்தியின் இன்னொரு வெளிப்பாடுதான் இது. இந்த அடிப்படை அணுகுமுறையில் வாஜ்பாய் - அத்வானிக்கும் ஜெயலலிதாவுக்கும் எள்ளளவு வேறுபாடும் கிடையாது; முற்றான உடன்பாடுதான். இடையில் ஏற்படும் ஊடல்கள் பெரிய பிரச்சினையே கிடையாது. இதெல்லாம் வைகோ அறியாததல்ல. தெரிந்தும் அரசியல் ஆதாயம் கருதி மத, இனச் சிறுபான்மையினருக்கும் உழைக் கும் மக்களுக்கும் எதிராக இந்துமதவெறிப் பாசிசச் சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு சந்தர்ப்பவாத - பிழைப்புவாத நாடகமாடினார். அதற்கு அவரே பலியாகியுள்ளார். ●



படிப்பகம்

www.padippakam.com

# இப்படி இருக்கட்டும் நாளைய திருவிழா

இனியுமா, உன்தலை
நிலம் நோக்கி...?
வேண்டாம் இந்த வெட்கக்கேடு.

முற்றுப்புள்ளியை
முதலில் அடிமைச்சாசனத்தின்
நெற்றியில் வை.

உன் கையில் பற்றியுள்ள
மரக்குச்சிகளைத் தூக்கித் தூர எறி.

ஆதிக்க வர்க்கங்களின்
விலா எலும்பினை உடைத்து
பறையிசை எழுப்பு,
அசுர கானம் முழங்கி
விழாவினைத் துவக்கு....

எத்தனை நூற்றாண்டுகள்
நம் முதுகில் அவர்களின் கால்கள்?



அந்த வர்க்கங்களின்
நரம்புகளை உருவி, அதில்
அவர்களின் சுயநல
இதயங்களைக் கோர்த்து
வண்ணக் காகிதங்களைப் போல்
உன் வீதி முழுவதும்
தோரணங்கள் கட்டு.

உணவு,
உடை,
வீடு,
நிலம்... அனைத்தும் ஆக்கிரமித்த
அவர்களின் கோரப்பிடியிலிருந்து
அத்தனையும்
பறிமுதல் செய்து
எதுவுமே இன்றி நிற்கும்
உன் பாட்டாளித் தலைமுறையின்
பாதங்களுக்குக் கீழ் பரப்பு.

ஒவ்வொரு நெல் மணியும்
நம் குருதியில் பிரசவித்த வலியை
நானும் நீயும் மட்டுமே
உணர்ந்திட முடியும்.
நம் வீட்டுப் பாத்திரங்களில்
காற்று நிரம்பி இருக்க,
விளைந்ததைத் தின்றுவிட்டுச்
செரிக்காமல் நடைபயிலும்
அவர்களுக்கு எப்படித் தெரியும்
நம் வயல் வெளித்தவங்கள்?

தெரிவிக்கத்தான் வேண்டும்
பூமியெங்கும் வேர்களாய்
நம் கால்களை இறக்கி
மரங்களென நின்று.

அதையும் மீறி
யாராவது நம்மை அசைக்க
முயற்சித்தால்....

இதுவரை,
நிலத்தை மட்டுமே பிளந்த
கலப்பையின் கொழுவை உருவி
அவர்களின் நெஞ்சில் இறக்குவோம்.

எத்தனை நாள்தான்
நீயும் நானும் மட்டும்
குருதியினைச் சிந்துவது?

— கவிதையும், ஓவியமும்
முகிலன்



படிப்பகம்

www.padippakam.com

# மடங்கள், ஆதீனங்கள்:

# ஆன்மீகப் பெருச்சாளிகள்

◇◆◇

**சமயக்குரவர் போர்வையில் சாமர்த்தியமாக நடந்து கொள்ளத் தெரியாத மாதுரியைப் பார்த்து ஆதீனம் சிரித்திருப்பார். சங்கரமடம் போல விசயத்தை நாலு சுவருக்குள்ளேயே அமுக்கத் தெரியாத ஆதீனத்தைப் பார்த்து சங்கராச்சாரி சிரிக்கிறார்.**

◇◆◇

முன் அட்டை ஓவியம்: முகிலன்

''திரைப்பட நடிகை மாதுரி விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கைது, திருவாடுதுறை ஆதீனத்தைக் கொல்ல முயற்சி! இளைய சன்னிதானம் தற்கொலை முயற்சி!''

அடுத்தடுத்து வந்த செய்திகளால் மக்கள் அதிர்ச்சியானார்களோ இல்லையோ, அதிர்ச்சி தரும் செய்திகளை வாரி வழங்கும் பத்திரிக்கைகள் தங்களது நிருபர் பட்டாளத்தை எந்தப் பக்கம் அனுப்புவது என்று நிலைகுலைந்து போய்விட்டன.

''மாதுரி ஆந்திராவில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த இரண்டாவது பெண். சோத்துக்கே கஷ்டம், துணிக்கே பஞ்சம். 'பாவம் கொடூரன்' போன்ற ஆபாசப் படங்களில் நடித்து கஷ்டப்பட்டு முன்னேறியவள் இன்று இப்படியாகிவிட்டது'' என்ற நடிகையின் கதையைப் போலவே ஆதீனத்தின் கதையும் தொடர்கிறது. ''பெரிய தம்பிரான் மதுரா கோட்ஸில் வேலை பார்த்து, பணம் கையாடல் பிரச்சினையில் வேலையை விட்டுத் துரத்தப்பட்டவர். சாதாரண குமஸ்தா. இளைய தம்பிரான் திருநெல்வேலிப் பக்கம் ஒரு சாதாரண ஆள், மளிகைக் கடையில் இருந்தவர்'' என்று முன்கதைச் சுருக்கத்தை வழங்குகிறார்கள் பத்திரிக்கை உலகத் தம்பிரான்கள்.

நக்கீரன் இதழ் ஒருபடி முன்னேபோய் நடிகை மாதுரியின் 'வாழ்க்கைப் போராட்டங்களை'த் தொடராக வெளியிட ஆரம்பித்து விட்டது. ஒரு நடிகைக்கு உள்ள வாய்ப்புகூட எங்கள் ஆதீனத்திற்குக் கிடையாதா? என்று சிணுங்கும் சைவர்கள் வருந்தவேண்டாம். அந்தக் காலத்து நக்கீரன் மெகாத் தொடர்கள் தானே பெரிய புராணம்!

ஒரு நடிகையையும், மதத்தலைவர்களையும் இணை வைத்துப் பேசுவது சரியா என்று பக்திமான்களின் குரல் எங்களுக்குக் கேட்காமலில்லை. என்ன செய்ய? ஒரு நடிகையின் ஆபாசப் படச் சுருளில் ஆதீனத்தின் சிவஞானபோதம் சிக்கிக் கிடக்கிறதே!

நாம் சொல்வது ஒருபுறமிருக்கட்டும். இவர்களே ஒரு மதத்தலைவரை அறிமுகப்படுத்தும்போது, 'வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதை' என்று ஒரு நடிகையை மார்க்கெட்டுக்குள் இறக்கி விடுவது போலத்தானே ஜகஜ்ஜோதியாய்க் காட்டுகிறார்கள். விசயம் வெளியே வந்து நாறும்போதுதான் 'அவள் ஏற்கெனவே இப்படி' 'இவர் ஏற்கனவே அப்படி' என்று நதிமூலம், ரிஷிமூலத்துக்குள் இறங்குகிறார்கள்.

இவர்களது குலம் என்ன, கோத்திரம் என்ன என்ற விசாரணையே அப்புறம் தானே தொடங்குகிறது! இளைய தம்பிரான் பெரிய தம்பிரானைக் கொலை செய்யும் முயற்சியில் இறங்காவிட்டால் நம்மில் எத்தனைப் பேருக்குப் பெரிய தம்பிரான் மதுரா கோட்ஸில் மாஜி ஊழல் பேர்வழி என்ற விவரம் தெரிய வந்திருக்கும்?

ஒழுக்கக் கேட்டிலும், சமூக விரோதத் தன்மையிலும் நவீன மதமான சினிமாவுக்கும், புராதன மதமான இந்துமதத்திற்கும் உள்ள இணைப்பை விலக்கிப் பார்ப்பது இந்து மதத்தின் வீரியத்தைக் குறைத்து மதிப்பிடும் குற்றமாதலால் நாம் இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது. அப்படியானால் இரண்டும் ஒன்றுதானா?

இந்தக் கேள்விக்கு நம்மைவிட ஆதி சங்கரர் அடித்துப் பதில் சொல்கிறார். ''பரமாத்மா ஒன்றுதான், அது பலவாகக் காணப்படுவதற்குக் காரணம் மாயை, மெய்ஞானம் தோன்றியவுடனேயே அந்த மாயை அழிந்துவிடும்'' என்கிறது அவரது அத்வைதம். அந்த மாயை மாதுரி வடிவத்தில் வந்தால் பரிசீலிக்கக் கூடாதா என்ன?

**மாட்டிக் கொள்ளும் நடிகைகள் மார்க்கெட்டை இழக்காத மடாதிபதிகள்**

சமயக்குரவர் போர்வையில் சாமர்த்தி



படிப்பகம்

www.padippakam.com

யமாக நடந்து கொள்ளத் தெரியாத மாதுரியைப் பார்த்து ஆதீனம் சிரித்திருப்பார். சங்கரமடம் போல விசயத்தை நாலு சுவருக்குள்ளேயே அமுக்கத் தெரியாத ஆதீனத்தைப் பார்த்து சங்கராச்சாரி சிரிக்கிறார்.

'சரிதான் மாயை பலவாகும்' என்று ஆதி சங்கரரைப் போல நாமும் சிரித்து விட்டுப் போக முடியாது. ஏனெனில் கோவில்களும் மடங்களும் தனிநபர் விவகாரங்கள் அல்ல, அவைகளின் தோற்றமும், வரலாறுமே ஊரை அடித்து உலையில் போட்டவைகள்தான்.

**திருடர்களுக்குத் தேவதானம் உழவர்களுக்கு அவமானம்!**

எந்தத் தம்பிரான்களும் கழனியில் இறங்கி நாத்துநட்டு, ஊர் ஊராய்ப் போய் அறுப்பறுத்து எந்த மடத்தையும் உருவாக்கிவிடவில்லை. ''மன்னனே இறைவன், அவனைச் சார்ந்தும் அவனுக்கே அடங்கியும் அவனது கருணையை எதிர்பார்த்தும் வாழ்வதுமே, இவ்வுலக வாழ்க்கை'' என்று மக்களை அடிமைப்படுத்தியும், சிறுமைப்படுத்தியும் சமயப் பணி என்ற போர்வையில் ''பதி, பசு, பாசம்'' என்று சைவ சித்தாந்தம் பரப்பித் திரிந்த சைவக் கைக்கூலிகளுக்கு **மன்னர்கள் கைம்மாறாக ஊர் மக்களின்** விளைநிலத்தை நூறு வேலி, ஆயிரம் வேலி என்று அபகரித்துக் கொடுத்தது தான் இந்த மடங்களும், பேராலயங்களும்.

> **ஒரு நடிகையையும், மதத்தலைவர்களையும் இணை வைத்துப் பேசுவது சரியா என்று பக்திமான்களின் குரல் எங்களுக்குக் கேட்காமலில்லை. என்ன செய்ய? ஒரு நடிகையின் ஆபாசப் படச் சுருளில் ஆதீனத்தின் சிவஞானபோதம் சிக்கிக் கிடக்கிறதே!**



ஒவ்வொரு மடத்துக்கும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களும், மன்னர்களும், பட்ட மகரிஷிகளும், வணிகர்களும், தங்க வைடூரியங்களையும் தங்களுக்கு கீழ் வேலை செய்த கூலி விவசாயிகளுடன் சேர்த்தே கொடுத்து நிலங்களையும், 'குடிநீங்கா தேவதானம்'' என்ற பெயரில் அடிமைப்படுத்தினர். பருவநிலை பொய்த்தாலும் மேல்வாரம், கீழ்வாரம் என்று கடுமையான வரிகளைப் போட்டு, குத்தகை பாக்கி அளக்காத கூலி விவசாயிகளைக் கொன்று புதைத்த இடத்தில் தென்னங்கன்றை நட்டுவிட்டு மடங்களின் 'சைவத் தொண்டை' இன்றும் மக்கள் வாய்வழிக் கதையாகப் பேசி வருகின்றனர்.

திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும் எனும் இந்தச் சைவசிகாமணிகள்தான், தெய்வக் கட்டளைக்கு அடிபணிந்து ''உழுகுடி'' வரியை அளிக்க இயலாத விவசாயிகளைப் பார்த்து ''உன் பொண்டாட்டியை என் மடத்துக் கோவிலுக்கு தேவரடியாளாக்கு!'' என்று வாய் மணந்தார்கள்.






படிப்பகம்

www.padippakam.com

## ஒரு கொடி, இரு மலர்கள்

பார்ப்பன மடங்களும், சைவ மடங்களும், சாதியமும் சில சாத்திர முறைகளிலும்தான் வேறு வேறு. ஆனால் நடைமுறையில் இரண்டுமே ஒரு (பூணூல்) கொடியில் இரு மலர்கள். சைவ மடங்கள் சித்தாந்த அளவில் தங்களுக்கான சைவ ஆகமங்களுடன் பார்ப்பன வேதங்களையும் ஏற்றுக் கொள்கிறார்கள். தங்களது கட்டுப்பாட்டுக்குக் கீழுள்ள கோயில்களில்கூட பார்ப்பனர்களையே அர்ச்சகர்களாக வைத்து அடிபணிகின்றனர். இதையும் விடக் கேவலம் என்னவென்றால் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தடைகோரும் வழக்கில் காஞ்சி மடத்துடன் தன்னையும் இணைத்துக் கொண்டவைதான் இந்தச் சைவ மடங்கள்.

''மனதைச் சமநிலைக்குக் கொண்டுவர சமஸ்கிருதம் படியுங்கள்'' என்று சிறிசுக்குப் பெரிசு அறிவுரை வழங்கியதாம். ஏன், தமிழ் படித்ததனால்தான் மனம் தறிகெட்டு அலைகிறதோ? இந்தப் பார்ப்பன அடிமைத்தனத்தை மெச்சித்தான் கட்டைப் பஞ்சாயத்துப் பண்ண இராம. கோபாலன் ஓடோடி வருகிறார். எனவே அவாளை விட்டுவிட்டு நம்மாளை நாறடிக்கிறார்களே என்று யாரும் கவலை கொள்ள வேண்டாம். இது நம்மாளு அல்ல அவாளு.

ஊரே எறும்புப் புற்றிலும், எலி வளையிலும் அரிசியெடுத்து பசிபோக்கிய நேரத்திலும் குகைக்குள் தானியங்களையும், செல்வங்களையும் பதுக்கி வைத்து, வரி போட்டுக் கசக்கிப் பிழிந்த இந்த மடங்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து மக்கள் கலகம் செய்த வரலாறு திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டில் ''குகையிடிக் கலகம்'' என்று குறிப்பிடப்படுகிறது.

### மொள்ள மாறி முடிச்சு மாறி மூணாவதாக சங்கராச்சாரி!

''சிவன் சொத்து குல நாசம்'' என்று மிரட்டுகிறார்களே, அந்தச் சிவன் மடங்களுக்கும் ஆதீனங்களுக்கும் சேர்த்துக் கொடுத்திருக்கும் சொத்து இருக்கிறதே, அதுதான் பல குலங்களை நாசம் செய்து பிடுங்கிய சொத்து. இப்படி ஊர்தாலி அறுத்துச் சேர்த்த சொத்தை நிர்வாகம் செய்ய சின்ன ஆதீனமாகப் பட்டினத்தாரையா நியமிக்க முடியும்?

இவனை மடத்தில் சேர்த்தால் ஊழலுக்கு உடந்தையாக இருப்பான், இங்கு நடக்கும் ஒழுக்கக் கேடுகளை வெளியே கசிய விடமாட்டான் என்ற கிரிமினல் பயோடேட்டாபடிதான் இவர்களின் தேர்வே நடக்கிறது. அப்படியிருக்கையில் இப்படிப்பட்ட கிரிமினல்கள் எந்தப் பஞ்சமாபாதகத்தையும் செய்யாமல் இருந்தால்தான் நாம் அதிர்ச்சியடைய முடியும்.

நூறு கோடி மக்கள் கொண்ட இந்தியாவில் இந்த ஆள்தான் ஜகத்துக்கே குரு என்றால், இத்தனைக் கோடிப் பேரையும் ஒரு சல்லடையில் போட்டுச் சலித்து இந்த ஆள்தான் 'பெஸ்ட்' என்று பொறுக்கி எடுத்தார்களா? இல்லை இவர்தான் ஜகத்குரு என்றால் ஜகத்குருவைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறையைச் சொல்லுங்களய்யா மடாதிபதிகளே என்றும் கேட்கும் உரிமை பக்தனாகிய உங்களுக்கு உண்டா? பத்திரிக்கைகள்தான் கேட்டதுண்டா?

வேத ஆகமங்கள் உபநிடதங்கள், சாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றவர்கள் அத்யயனம், பாராயணத்தில் கரை கண்டவர்கள் மெய்கண்ட சாத்திரங்களையும், சிவஞான போதத்தையும், பதிகங்களையும், புராணங்களையும் கசடறக் கற்றவர்கள்தான் மடத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால் அது உங்கள் அறியாமை.

செத்துப் போன சீனியர் சங்கராச்சாரியாரை ஹைஸ்கூலிலிருந்து கன்னுக்குட்டியைப் போல மடத்துக்கு ஓட்டிவந்து ஜகத்குருவாக அடையாளப்படுத்திய பிறகுதான் வாத்தியார்களை வைத்து வேத உபநிடதங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

தற்போதைய இரண்டு சங்கராச்சாரிகளின் 'பயோடேட்டா' நமக்குத் தெரியாது, இந்த பிரம்ம ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முயல்பவர்கள் ஏதாவதொரு போலீசு ஸ்டேசனில் தலைவெடித்துச் சாகக்கூடும்.

திருவாடுதுறை ஆதீனம் சிவப்பிரகாச பரமாச்சாரியார் 'உத்தமர் உய்ய வழி காட்டும் சிவத்தொண்டி'ன் காரணமாகத் தீட்சை பெற்று வரவில்லை. மதுரா கோட்ஸில் மாமூல் விவகாரத்தில் மாட்டிக் கொண்டுதான் சித்தநெறி காட்டும் சிவப்பணிக்குத் தலைமையேற்க வந்துள்ளார்.

சின்ன ஆதீனம் இந்த ஆன்மீகத் தரகு வேலைக்கு நியமிக்கப்படுமுன் ரியல் எஸ்டேட் தரகராக இருந்தவராம்.

தேர்தலில் நிற்கும் ஓட்டுச்சீட்டு அரசியல்வாதியை தேர்தல் கமிசன் ''நீ கிரிமினலா? சொத்து விவரம் என்ன? காவல் நிலையத்தில் வழக்கு உண்டா?'' என்று விளக்கம் கேட்க வேண்டும் என்கிறது தேர்தல் கமிசன். இது வாக்காளர்களின் தகவல் பெறும் உரிமை என்கிறது உச்ச நீதி மன்றம். ஆனால் ஜகத்துக்கே குரு என்பவரிடம் இந்தியாவில் இத்தனைக் கோடி இந்துக்கள் இருக்கும்போது நீங்கள்தான் முதல் ஆள் என்றால் அது எந்த வகையில் உங்கள் தேர்வு என்று யாராவது கேள்வி கேட்பதுண்டா?

அம்பானி, டாட்டா, பிர்லாக்கள்கூட தங்களது பங்குதாரர்களிடம் இந்த ஆண்டு கம்பெனி இலாபத்தில் ஓடியிருக்கிறது அல்லது நட்டத்தில் போயிருக்கிறது என்று விளக்கமளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கோடிக்கணக்கில் சொத்துக்களைப் புரட்டும் இந்த மடாதிபதிகள் யாராவது தங்களைப் பின்பற்றும் அல்லது தங்களோடு மதம் என்ற வகையில் இணைந்த பக்த கோடிகள் யாருக்காவது ''இவ்வளவு கோடி சொத்து, இன்றைய தேதிக்கு இலாபம் இவ்வளவு'' என்று கணக்கு காட்டுவதுண்டா? நிலைமை இப்படியிருக்க இராம. கோபாலன் போன்ற வீரத் துறவிகள் இந்துக்கள் உரிமையில் அரசு தலையிடக் கூடாது என்று கூப்பாடு போடுகின்றனர். ஆதீன விவகாரத்தில் அவுரங்கசீப்பா தலையிட்டான்?

இந்துக்களின் உரிமை என்று பொதுவாகப் பூசி மெழுகுவதைவிட, கோயில், சங்கராச்சாரி, மடாதிபதிகளின் சொத்தில்



படிப்பகம்

www.padippakam.com

கை வைக்காதே என்று வீரத்துறவி நேரடியாக விசயத்திற்கு வருவது நல்லது.

**தகுதி திறமை மோசடி, கிரிமினலுக்கே சிவனடி!**

''இந்தியாவின் தகுதி தேவைப்படாத ஒரே தொழில் புரோகிதத் தொழில்'' என்றார் அம்பேத்கர். சங்கரமடத்தில் பரமாச்சாரியையும், சைவ மடத்தில் ஆதீனத்தையும் தெரிவு செய்ய முதல் தகுதி சாதி. கிரிமினல் தகுதிகள் வளர்ப்பிலேயே தம் சாதிக்காரனுக்குத்தான் உண்டு என்பதில் அவாளுக்கு அவ்வளவு நம்பிக்கை. இரண்டாவது தகுதி, பத்துக் கொலை செய்தாலும் பதட்டமிட்டாமல் முகத்தைப் பராமரிக்கின்ற ''தெய்வீகக் களை''. மூன்றாவதாக, மடத்தின் மாஃபியா வேலைகள் மற்றும் மடாதிபதியின் பேரின்பம் சாராத லீலைகள் போன்றவற்றின் இரகசியத்தைக் காப்பாற்றும் 'பணிவு'. நான்காவதாக, பெரியவர் சமாதி அடைந்து அதிகாரம் தன் கைக்கு வரும்வரை அடக்கி வாசிக்கும் 'பொறுமை'.

இந்த மூன்றாவது, நான்காவது விவகாரங்களில் தோன்றும் முரண்பாட்டில்தான் இளவரசர்கள் மன்னனைக் கொலை செய்கிறார்கள்; பெரிய ஆதீனங்களுக்குச் சின்ன ஆதீனங்கள் மருந்து வைக்கிறார்கள். வாழையடி வாழையாக அரண்மனைகளிலும் ஆதீனங்களிலும் நடந்து வருவது இதுதான்.

**அரசியல் புரோக்கர்களின் சமயத் தொண்டு!**

சரி, இதெல்லாம் அரசுக்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் தெரியாதா? தெரிந்தே இந்தக் குற்றப் பரம்பரையை குரு பரம்பரையாக அனுமதிப்பது ஏன்?

ஒன்று — மக்களை மடமையில் இருத்தி வைக்க - ஆளும் வர்க்கத்திற்கு மடங்களின் சேவை தேவையாயிருக்கிறது. இன்னொன்று — ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகார வர்க்கம் - மடாதிபதிகள் இவர்கள் ஒரு மாஃபியா கும்பல் போல அத்வைத ஒன்றுகலப்பில் சேர்ந்தே இயங்குகிறார்கள்.

திருவாடுதுறை இளைய மடாதிபதியைக் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருந்த எஸ்.பி. அடுத்து என்ன செய்வது என்று மேலிடத்தில் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் வந்தது? இந்த மடாதிபதியோடு எந்த ஐ.ஏ.எஸ். அமைச்சர்கள் தொடர்பு இருக்குமோ என்று இயல்பிலேயே அந்த நட்பு வட்டத்தைப் புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஈரோட்டு கூலித் தொழிலாளி புஷ்பாவுக்கோ உடனே பாலியல் பலாத்காரம் வரை போலீசு தண்டனையாக வழங்கி விடுகிறது. ஏன்? கிரிமினலாய் இருந்தாலும் ஆதீனம் ஆளும் வர்க்கத்திற்குக் கூட்டாளி. குற்றமற்றவராய் இருந்தாலும் புஷ்பம் கூலித் தொழிலாளி. அதுதான் பதி, பசு, (வர்க்க) பாசம்.

**திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும் எனும் இந்தச் சைவசிகாமணிகள் தான், தெய்வக் கட்டளைக்கு அடிபணிந்து "உழுகுடி" வரியை அளிக்க இயலாத விவசாயிகளைப் பார்த்து "உன் பொண்டாட்டியை என் மடத்துக் கோவிலுக்கு தேவரடியாளாக்கு!" என்று வாய் மணந்தார்கள்.**

வர்க்க ப்பாசம் மட்டுமா. சாதிப் பாசமும் கலந்து வருகிறது. பிரச்சினைகளுக்குள்ளான திருவாடுதுறை மடத்தை சைவப்பிள்ளைமார் மடம் என்று எழுதும் பத்திரிக்கைகள், காஞ்சி மடத்தை பார்ப்பன மடம் என்று எழுதுவதில் லையே ஏன்? அதுதான் 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.'

காசு செலவானாலும் நல்ல பிராண்டா போடு என்று கள்ளச் சாராயத்தை விடுத்து நல்ல சாராயத்திற்குத் தாவும் கும்பல் போல, சில பக்திமான்கள், அதுக்குத்தான் சார் என்ன இருந்தாலும் காஞ்சி சங்கராச்சாரி தான் கரெக்ட் என்று பிரமையில் ஆழ்ந்து போகிறார்கள். காஞ்சிமடம் இயக்கும் கல்லூரிகளில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதோர்க்குத் தனித்தனிப் பந்தி போட்டு தீண்டாமையைக் கடைப் பிடிக்கும் சமூக விரோதிக்குப் பெயர் ஜகத்குரு.

இந்து சமயப் பணி என்ற பெயரில் இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகளும் தரகு வேலையில் ஈடுபட்டு 'உனக்கு மத்திய இணை அமைச்சர், உனக்கு வட்டம், உனக்கு மாவட்டம்' என்று அரசியல் புரோக்கர் வேலை செய்யும் காஞ்சி மடத்தின் 'சமயத் தொண்டு' இண்டியன் எக்ஸ்பிரஸில் மாய்ந்து மாய்ந்து ஆய்வுக் கட்டுரை எழுதும் அம்பிகளுக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் தங்கள் சாதி பிராண்டைத் தூக்கிப் பிடிப்பதில் அப்படியொரு பத்திரிகா தர்மம். சங்கர மடத்தின் யோக்யதை என்ன? சொந்த மனைவியோடு போகிறவருக்கும் ஆசி! அடுத்தவன் மனைவியோடு போகிறவனுக்கும் ஆசி! காமக் கொடூரன் சரவணபவன் அண்ணாச்சிக்கும் ஜயேந்திரர் ஆசி! ஒருவனுக்கு ஒருத்தி உத்தம இந்துவுக்கும் ஜயேந்திரர் ஆசி! மல்லையாவுக்கும் திறப்புவிழா ஆசி! சமஸ்கிருதப் பாடசாலைத் திறப்பு விழாவுக்கும் ஜயேந்திரர் ஆசி! மக்கள் யாரையெல்லாம் களவாணி, சாராயக் கடைக்காரன், பொறுக்கி அரசியல்வாதி என்று காறித் துப்புகிறார்களோ அனைவரும் சங்கராச்சாரியிடம் வரிசையாகப் போய்க் காலில் விழுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் ஜயேந்திரர் ஆசி வழங்கும் மர்மம் என்ன?

அம்பானி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கையில் தனி விமானம் ஏறி அவசர அவசரமாகப் போய் சங்கராச்சாரி ஆசீர்வாதம் வழங்குகிறார். என்ன உறவு? 30 ஆண்டுகளில் குறுக்கு வழியில் பணக்காரனான குற்றவாளி அம்பானியுடன் சுவாமிகளுக்கு என்ன தொடர்போ?

ஜெயலலிதா போன்ற அரசியல் கழிசடைகளை முதலமைச்சராக்கி விட்டார்களே என்பதை விட, கராத்தேவுக்கு மேயர் பதவியா என்பதைவிட, பாபா ரஜினிக்கு ரசிகர் மன்றங்களா என்பதை விட, மும்தாஜுக்கு இவ்வளவு செல்வாக்கா என்பதைவிடக் கேவலமானது இந்த மடங்களும், மடாதிபதிகளும் நாட்டை ஆள்வது.

துப்பாக்கிகள் புடைசூழ ஆபாசப் படம் பார்த்துச் சிற்றின்பம் தேடுவதற்குப் பதில் பத்திரகிரியார் பாடியதுபோல ''பட்டணம் சுற்றிப் பகலே திரிவோர்க்கு முட்டாக்கு ஏதுக்கடி'' என்று பேசாமல் பப்ளிக்கா வந்து விடுங்கள்.

சொத்தின் காரணமாகக் கொலையாகி விடுவோம் என்று உயிர்ப்பயம் கொள்ளும் மாடாதிபதிகளுக்கு உயிர் பிழைக்க ஒரே வழிதான் உண்டு. விவசாயிகளிடமிருந்து மடங்கள் பிடுங்கி வைத்திருக்கும் கிராமப்புறத்து நிலங்களை கூலி விவசாயிகளுக்கும், நகர்ப்புறத்துச் சொத்துக்களை நகர்ப்புற ஏழைகளுக்கும் துறந்துவிட்டு, உண்மையிலேயே துறவி ஆவதுதான் அந்த ஒரே வழி. மறுத்தால் அவர்களை உண்மையான துறவிகளாக்கும் பொறுப்பும் கடமையும் நம்மீது திணிக்கப்படும்போது நாம் மறுக்க முடியுமா என்ன?

● சித்தன்



படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயமாகும் கல்வி புதிய மனுதர்மம் – 2

★ ப. சிவக்குமார்

மத்திய அரசாகட்டும் அல்லது தமிழக அரசாகட்டும் உலக வங்கியின் அடிமைகளாகி மக்களுக்கு எதிரான பொருளாதார, தொழில் மற்றும் கல்விக் கொள்கைகளை அமலாக்குவதில் சளைக்கவில்லை. சமீபத்தில் தமிழக அரசு சனோலா மற்றும் டாப்கோ நிறுவனங்கள் உள்ளிட்ட 33 நிறுவனங்களை கட்டாய ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்து மூடியுள்ளதும், அரசு ஊழியர்களுக்குரிய ஈட்டிய விடுப்புச் சலுகையை முடக்கியிருப்பதும், அரசுக் கல்லூரியில் மணி நேரக் கூலிகளாக விருந்து ஆசிரியர்களை (Guest Lecturers) நியமிப்பதும், இனிமேல் அடிப்படை ஊழியர்கள் நியமனம் என்பதே இல்லை டெண்டர் விட்டுத்தான் தனியார் நிறுவனம் மூலமாகக் கூட்டுபவரையும் அலுவலக உதவியாளரையும் நியமிக்க வேண்டும் எனவும், போக்குவரத்தையும் மின்வாரியத்தையும் தனியார்க்குத் தாரை வார்க்கலாம் எனவும், ஓய்வு பெற்ற காலிப் பணி இடங்களை நிரப்பக் கூடாதெனவும் உலக வங்கிக் கட்டளைகளைத் தப்பாமல் நிறைவேற்றுவதற்கு உதாரணங்கள்.

சேவைத்துறை செலவினங்களைக் குறைக்க முனைந்துள்ள தமிழக அரசு கல்வி வியாபாரத்தை ஊக்குவிப்பதில் ஆச்சரியமில்லை. இந்தக் கல்வி வியாபாரத்தை ஊக்குவித்ததில் திராவிட முன்னேற்றக் கழகமும் சளைக்கவில்லை. 1989-இல் தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்தபோது கல்வித் துறைச் செயலராக இருந்த சங்கரசுப்பையன் ஐ.ஏ.எஸ். 3.7.90-ல் வெளியிட்ட 50037/z1 என்ற எண்ணுடைய ஆணைதான் உதவி பெறும் கல்லூரிகளில் சுயநிதி வகுப்பு தொடங்குவதைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்தது.

அந்த ஆணையில் ''1990-91 ஆம் ஆண்டில் நிதி நெருக்கடி காரணமாக உதவி பெறும் கல்லூரிகளில் எந்தப் புதிய வகுப்புகளும் தொடங்க அனுமதி இல்லை. பல்கலைக்கழகங்கள் அனுமதித்த 35 பாட வகுப்புகளில் 16 பாட வகுப்புகளுக்கு மட்டுமே மானியம் தரப்படும். கல்வி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப புதிய பாட வகுப்புகளை ஊக்குவிக்க பின்வரும் நிபந்தனைக்கு உட்பட வேண்டும். புதிய பாட வகுப்புகளுக்கான முழுச் செலவையும் கல்லூரிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறப்பட்டது. அதாவது புதிய பாட வகுப்புகளுக்கு மானியம் இல்லை என்று கூறப்பட்டது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சர் அன்பழகன் அமலாக்கிய இந்த ஆணைதான், சென்னை கிறித்தவக் கல்லூரி, டி.ஜி. வைணவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி போன்ற உதவிபெறும் கல்லூரிகளில் எம்.சி.ஏ. பாட வகுப்புகளை சுயநிதி வகுப்புகளாகத் தொடங்க ஊக்குவித்தது.

சென்னை மாநிலக் கல்லூரியில் எம்.சி.ஏ. படிக்க இரண்டாயிரம்தான் கட்டணம். கிறித்துவக் கல்லூரியிலோ, வைணவக் கல்லூரியிலோ நாற்பதாயிரம் கட்டணம். இது உதவிபெறும் கல்லூரிகளின் வியாபார லட்சணம். சுயநிதிக் கல்லூரிகளிலோ கல்லூரிக்கு ஒருவிதமாக ஆண்டொன்றுக்கு நன்கொடை உட்பட அறுபதாயிரம். சோழா ஓட்டல் காபி அறுபது, ஹாட் பிரட் கடை காபி முப்பது, கையேந்தி பவன் டீ இரண்டு ரூபா. கல்வியும் காபிக்கடை வியாபாரம் தானோ?

மேலும் அரசுக் கல்லூரிகளில் 'சுய நிதி வகுப்புகள்' எனத் தொடங்கிய விந்தையும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஊக்குவிக்கப்படுவதும் தொடர்ந்தது. 80-களில் அரங்கநாயகம் கல்வி அமைச்சராக இருந்தபோது தொடங்கப் பெற்ற இந்தக் கல்வி வியாபார 'சுயநிதிக் கொள்ளை கல்லூரி''க் கொள்கை தி.மு.க. அன்பழகன் காலத்தில் பராமரிக்கப்பட்டுத் தற்போதைய கல்வி அமைச்சர் தம்பித்துரையால் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. இதன் உச்சகட்ட அறிவிப்புதான் இனிமேல் உதவி பெறும் கல்லூரிகளுக்கு மானியம் இல்லை என்பது.

பெரியாரின் அடித்தட்டு மக்களுக்கான சமூக விடுதலைக் கொள்கையைக் காப்பாற்ற அவதரித்த இந்த இரண்டு திராவிடக் கட்சிகளும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வி பெறும் உரிமையை வியாபாரச் சந்தையில் ஏலம் போட்டு விற்றதில் ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. தேர்தலில் நேரடியாக நிற்காமல் திராவிட பெரியாரிய கொள்கைகளைத் தூக்கிப் பிடிப்பதாகக் கூறிக் கொள்ளும் தோழர் கி. வீரமணி அண்மையில் *தொழில் உலகம்* இதழில் அளித்துள்ள பேட்டியில் ''பெரியார்தான் சுயநிதிக் கல்லூரிகள் என்ற சிந்தனைக்கு வித்திட்டார்'' என பெரியாரைக் கேவலப்படுத்தி தம்முடைய சுயநிதி வியாபாரக் கொள்கையை நியாயப்படுத்தியுள்ளது அதிர்ச்சிக்குரியதாகும்.

திருச்சியில் தேசியக் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, சீதாலட்சுமி கல்லூரி, ஹோலி கிராஸ் கல்லூரி என பார்ப்பனர் மற்றும் கிறித்தவர் ஆதிக்கத்தில் உதவிபெறும் கல்லூரிகள் இருந்ததைக் கண்ட தந்தை பெரியார், பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்தபோது மூன்றரை லட்ச ரூபாய் வழங்கி அரசுக் கல்லூரி தொடங்கியது பற்றி *தொழில் உலகம்* பேட்டியில் குறிப்பிடவந்த கி. வீரமணி ''... ஒரு சாதிக்கு மட்டுமே சொந்தமான கல்லூரியில் மற்ற சாதி மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. இதனை அறிந்த பெரியார் அவர்கள் 1965-இல் கல்லூரி ஆரம்பிக்கப் போகிறேன் என அறிக்கை ஒன்றை வெளியிட்டார்... இது குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரைப் பார்க்கும்படி என்னை கூறினார். ஐந்து லட்சம் ரூபாய் செலுத்தினால் தன்னுடைய பெயரில் கல்லூரி தொடங்கலாம் என்றார்கள்.''

**இந்த மாநிலத்தை 33 ஆண்டுகளாக மாறி மாறி ஆண்ட இந்த இரண்டு திராவிடக் கட்சிகளும் படிப்படியாக பள்ளிக்கல்வியில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் புற்றீசல் போல் பெருகவும் உயர்கல்வி வியாபாரமாகவும் மாற சேவை செய்துள்ளன. இவர்களின் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர்க்கான சமூகநீதிக் கொள்கை எவ்வளவு போலியானது என்பதற்கு இது சான்று.**



படிப்பகம்

www.padippakam.com

''ஏற்கெனவே திருச்சியில் ஐயா வாங்கியிருந்த கட்டிடம் 2 லட்சமாக மதிப்பிடப்பட்டது. மீதி மூன்று இலட்சத்தைக் காசோலையாக முதல்வரிடம் வழங்கினோம். மீண்டும் பணம் தேவை எனக் கேட்க மறுபடியும் 50,000 ரூபாய் வழங்கினோம். இந்தக் கல்லூரி கூட ஐயா பெயரில் இல்லாமல் வெறும் அரசுக் கல்லூரி என அழைக்கப்பட்டது. பின் இயக்கத் தோழர்கள் என் போன்றவர்களின் வற்புறுத்தலால் ஈ.வெ.ரா. கல்லூரி என மாற்றப்பட்டது... இப்படி ஐயா அவர்கள் பாதை வகுக்க இதை நாங்கள் பின்பற்றினோம். இன்றைக்கு ஏராளமான தனியார் சுயநிதிக் கல்லூரிகள் உருவாகி உள்ளன. இந்த சுயநிதிக் கல்லூரிகள் என்ற சிந்தனைக்கு வித்திட்டவர் ஐயா பெரியார் அவர்கள்தான்'' எனப் பேட்டியளித்து தம்முடைய வல்லத்திலுள்ள சுயநிதிப் பொறியியல் கல்லூரியையும் மற்ற சுயநிதிக் கல்வி வியாபார நிறுவனங்களையும் நியாயப்படுத்தியுள்ளது மோசமானதாகும்.

திருச்சியில் தந்தை பெரியாரின் முன்முயற்சியால் தொடங்கப் பெற்றது சுயநிதிக் கல்லூரியன்று. ''பெரியார் ஈ.வெ.ரா. அரசுக் கலைக்கல்லூரி'' என்ற பெயரில் இன்று வரை திருச்சியில் இயங்கி வரும் அரசுக் கல்லூரியே பெரியார் உதவியதாகும்.

தாழ்த்தப்பட்ட மிகவும் வறிய மாணவர்களின் படிப்புக்குதவும் இந்த அரசுக் கல்லூரி உருவாக பெரியார் எடுத்த முன்முயற்சியை நம்மால் மறக்க முடியாது. இந்தப் பெரியார் ஈ.வெ.ரா. அரசு கலைக் கல்லூரியை பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைத்து அதிமுக அரசு சட்ட முன்வடிவு இயற்றியுள்ள நிலையில் கி.வீரமணியின் பேட்டி எந்த அளவிற்கு முரண்பட்ட சிந்தனையின் கொச்சையான வெளிப்பாடாகத் தோன்றுகிறது எனப் புரிந்து கொள்ளலாம்.

பார்ப்பனர்களின் சாதிய ஒடுக்கு முறையைத் தூக்கியெறிய கலகம் செய்த பெரியாரின் வழிவந்த வீரமணியாகட்டும், ஆளுகின்ற அ.தி.மு.க.வாகட்டும் ஆண்ட தி.மு.க. ஆகட்டும் தங்களின் ஏகாதிபத்திய நிபந்தனை சார்பான கல்வி வியாபாரக் கொள்கையைத் தூக்கிப் பிடித்து நியாயப் படுத்துவது மீண்டும் ஒரு மனு தர்ம நிர்மாணத்திற்கு உதவாதா?

சுயநிதிக் கல்லூரிகள் அனைத்திலும் மொத்த இடங்களில் 50 சதவீதம் இலவச இடத்துக்கு மட்டுமே இட ஒதுக்கீடு. மற்ற 50 சதம் இடங்களுக்கு இட ஒதுக்கீடு இல்லையே! இந்தச் சுயநிதிக் கல்லூரிக்கா பெரியார் வித்திட்டார்?

கல்வி வியாபாரம் உச்சகட்டமாக நடைபெறும் இந்தத் தருணத்தில் அரசுக் கல்லூரிகளை பல்கலைக் கழகத்துடன் இணைத்து விட்டால் சுயநிதி வியாபாரத்துக்கும் தடையில்லாமல் இருக்கும்; குறைந்த விலையில் கல்வி கிடைக்கும் 67 அரசு நிறுவனங்கள் போட்டி சுயநிதிக் கல்லூரிகளுக்கு இல்லாமல் போகும். இதுதானே அரசின் உள்நோக்கம்.

இந்த இணைப்பு குறித்த சட்டமுன் வடிவு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடந்தபோது எதிர்க் கட்சித் தலைவர் முன்னாள் கல்வி அமைச்சர் அன்பழகன் அவையில் இல்லை; தி.மு.க. சட்ட முன் வடிவை எதிர்க்கவுமில்லை.




கல்வியின் உள்ளடக்கம், கல்வித் திட்டங்கள், கல்விக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை ஆளும் வர்க்கம் தன் நலனுக்காகவே திட்டமிடும் என்பதில் ஐயமில்லை. இந்த மாநிலத்தை 33 ஆண்டுகளாக மாறி மாறி ஆண்ட இந்த இரண்டு திராவிடக் கட்சிகளும் படிப்படியாக பள்ளிக்கல்வியில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் புற்றீசல் போல் பெருகவும் உயர்கல்வி வியாபாரமாகவும் மாற சேவை செய்துள்ளன. இவர்களின் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர்க்கான சமூகநீதிக் கொள்கை எவ்வளவு போலியானது என்பதற்கு இது சான்று. இவர்களில் எவர் ஆண்டாலும் இதே நிலை நீடிப்பதைக் கொண்டே இவர்களின் கல்விக் கொள்கை மத்திய அரசின் உலக வங்கி சார்ந்த கொள்கையாகவே இருந்திருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த ஆண்டு முதல் சட்டப்படிப்பும் இரண்டு வகையாகிவிட்டது. அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்க உள்ள பி.எல். ஆனர்ஸ் பட்டப் படிப்புக்கு ஆண்டொன்றுக்குக் கட்டணம் நாற்பதாயிரம். பிற சட்டக் கல்லூரிகளில் சட்டம் படிக்க ஆண்டொன்றுக்கு இரண்டாயிரம்தான். சட்டப்படிப்பில் இரண்டு சாதிகள் உருவாக்கப்படுகின்றன.

பார்ப்பனர்களுக்கும் உயர்சாதிகாரர்களுக்குமே வாய்ப்பாக இருந்த வழக்கறிஞர் தொழிலில் சாதாரணக் குடும்பத்து குப்பனும் சுப்பனும் ஈடுபட உதவியாக இருந்த அரசின் கல்விக்கொள்கை தூக்கி எறியப்பட்டு இன்றைய கல்விக் கொள்கை இரட்டைக் கல்வி முறையை அமலாக்குகின்றது. வசதி படைத்த மேல்தட்டு மக்களுக்கு ஒரு கல்வி; சாதாரண மக்களுக்கு ஒரு கல்வி. இது புதிய மனு தர்மம் இல்லாமல் வேறென்ன?

இந்தப் புதிய மனு தர்மக் கல்விக் கொள்கையைத் தமிழ்நாட்டில் தூக்கிப் பிடிப்பது திராவிடக் கட்சிகள்தான்.

தேசியக் கட்சிகளான காங்கிரசும், பா.ஜ.க.வும் இதிலிருந்து ஒன்றும் மாறுபட்டு நிற்கவில்லை. 1986 புதிய கல்விக் கொள்கை ராஜீவ் கால காங்கிரசின் கல்வி வியாபாரக் கொள்கை என்றால், 2000-ல் பா.ஜ.க. அரசு வெளியிட்ட அம்பானி - பிர்லா அறிக்கை புத்தாயிரம் ஆண்டு வியாபாரக் கொள்கை. இவை அனைத்தும் ஏதோ இந்தக் கட்சிகளின் சீரழிந்த கொள்கைகளாக மட்டுமே நாம் பார்ப்போமானால் தவறு செய்து விடுவோம். தொடக்கத்தில் கூறியது போல் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏகாதிபத்தியத்தின் பொம்மலாட்டத்திற்கேற்ப இந்த அரசியல் வியாபாரிகள் ஆடிய ஆட்டங்களின் வெளிப்பாடாகவே இதை நாம் பார்க்க வேண்டும்.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# அமைதிப் பேச்சுவார்த்தையில் அழுகும் பிணங்கள் - தொடரும் போராட்டம்!



உத்தமபாளையம் தாலுகா தேவாரம் - மேட்டுப்பட்டியில் அருந்ததியின மக்களின் பிணத்தை, அரசுப் பொதுப்பாதையில் எடுத்துச்செல்ல, மேல்சாதியினர் எதிர்த்து வருவதைப் பற்றி ஏற்கெனவே **புதிய கலாச்சாரத்தில்** எழுதியிருக்கிறோம்.

மேல்சாதியினரின் வெளிப்படையான தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக இவ்வட்டார அதிகாரிகள் யாரும் துரும்பைக் கூட அசைக்கவில்லை. இந்நிலையில் அருந்ததியர் போராட்டக் குழு சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையிட்டு 'அரசுப் பொதுப்பாதையில் பிணத்தை எடுத்துச் செல்ல எவ்விதத் தடையுமில்லை' - என ஆணை பெறப்பட்டது.

இதனை அடுத்து கடந்த ஏப்ரல் 15-ம் தேதி சன்னாசி என்பவர் இறந்த போது, உயர்நீதி மன்ற ஆணையையும் ஏற்க மறுத்து மேல்சாதியினர் கலகம் செய்தனர். ஆர்.டி.ஓ. தாசில்தார், டி.எஸ்.பி. மற்றும் நூற்றுக்கணக்கான போலீசார் திரண்டு வந்து, மேல்சாதியினரின் காலைப் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடி ''இந்த ஒருமுறை மட்டும் அனுமதியுங்கள்'' எனச் சம்மதிக்க வைத்தார்கள். போலீசு பாதுகாப்போடு அரசுப் பொதுப் பாதையில் பிணம் எடுத்துச் செல்லப்பட்டது.

இதைப் பொறுக்காத மேல்சாதியினர், இப்பிரச்சினைக்கு உயர்அதிகாரிகள் கொண்ட அமைதிக் கமிட்டி ஒன்றை அமைக்கக் கோரி உயர்நீதி மன்றத்தில் மனு செய்தனர். இதை விசாரித்த நீதிபதி தன் தீர்ப்பில், ''நாடு சுதந்திரம் அடைந்து 50 வருடமாகியும் இதுபோன்ற சாதி மோதல்கள் நடப்பதற்கு 'வருத்தம்' தெரிவித்து விட்டு, இருதரப்பும் சிவில் கோர்ட்டில் முறையிட்டுத் தீர்த்துக் கொள்ளுமாறு'' ஆலோசனை கூறி ஒதுங்கிக் கொண்டார். மேல்சாதியினரின் தீண்டாமைக் கொடுமையை மூடி மறைத்து சாதாரண நிலப்பிரச்சினையாக்கியதன் மூலம் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தியது உயர்நீதி மன்றம்.

இதன்பின், ஜூன் 6-ம் தேதி 'காளிவாடன்' என்ற அருந்ததியர் இறந்துவிட்டார். பிணத்தை பொதுப்பாதை வழியாக எடுத்துச் செல்வதில் உறுதியாக இருந்தனர் அருந்ததியர்கள். மேல்சாதியினரோ வீட்டுப் பெண்களை ஏவிப் பிண வண்டியை மறித்தனர். ஆதரவளித்த **விவசாயிகள் விடுதலை முன்னணித்** (வி.வி.மு.) தோழர்களையும், பாதுகாப்புக்கு வந்த போலீசாரையும் ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள். நிமிர்ந்து பார்த்தாலே 'என்னடா மொறைக்குறே' என்று கொதிக்கும் போலீசார், இவ்வளவு அசிங்கத்தையும் பார்த்துச் சிரித்துக் கொண்டு நின்றார்கள். ஆர்.டி.ஓ. தாசில்தார், டி.எஸ்.பி ஆகியோர் மீண்டும் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தி மீண்டும் மேல்சாதியினரைக் கெஞ்சி சம்மதம் பெற்று, பிணத்தை பொதுப் பாதை வழியே எடுத்துச் செல்ல வைத்தனர்.

''யாருடா பொணத்தை மறிக்குறது? இந்த ரோடு ஒங்க அப்பன்வீட்டுச் சொத்தா?'' என்று தன் வழக்கமான அரட்டல், மிரட்டலை போலீசு காட்டினாலே மேலசாதியினரில் பாதிப்பேர் ஓடிவிடுவார்கள். மீறி நிற்பவனை 'ரெண்டு தட்டு தட்டி உள்ளே தள்ளியிருந்தால்' இக்கிராமத்தில் மீண்டும் இந்தப் பிரச்சினை என்றுமே வந்திருக்காது. போலீசும், அதிகாரிகளும் இதைச் செய்யாததற்குக் காரணம் இவர்களே மேல்சாதி வெறியில் ஊறியவர்கள் என்பதுதான்.

மேல்சாதியினர் தரப்பில் இக்கலவரத்துக்குக் காரணமான தருமர், மணி போன்ற 4 பேரும் மிட்டாமிராசுகளல்ல! விவசாயத்தில் நட்டமாகி ஊரைவிட்டு ஓடுவதற்குத் தயாராக உள்ள சிறுவிவசாயிகள்தான்! இந்த 4 பேருமே இங்குள்ள தாழ்த்தப்பட்டோரிடம் நிலத்தை அடகு வைத்தும், வட்டிக்குப் பணமாகவும் கடன் வாங்கியுள்ளனர். இவர்களில் இரண்டு பேர் அருந்ததியரின பெண்களிடம் 5000 ரூபாய் வீதம் வட்டிக்கு வாங்கியுள்ளனர். வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் காரியம் சாதிக்கும் உள்நோக்கத்துடன்தான் இப்பிரச்சினையைத் தூண்டி வருகின்றனர். ''சக்கிலியன் பிணத்தை ஊருக்குள் விட்டால் கவுரவம் போய் விடும்'' என்று மேல்சாதி மக்களிடம் சாதி வெறியைத் தூண்டிவிட்டுக் கவுரவத்தைக் காப்பாற்ற ஒருவருக்கு 200 ரூபாய் வீதம் வசூலித்துத் தின்று திரிகிறது நால்வர் கோஷ்டி!



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் சட்டம் வழங்கும் ஒரு அடிப்படை உரிமையை சட்டத்தின் காவலர்கள் கண் முன்னாலேயே மேல்சாதியினர் காலில் மிதித்து நசுக்குகின்றனர். ஆனால் காவலர்களோ அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி நிற்கின்றனர். அருந்ததியின மக்களோ அரசியல் சட்ட உரிமையை நிலைநாட்ட களத்தில் உறுதியாக உண்மையான காவலர்களாக நிற்கின்றனர்.

ஆனால் டி.மேட்டுப்பட்டி கிராமத்தில் அமைதிக்கும் - சட்ட ஒழுங்குக்கும் சவாலாக இருதரப்பினரும் இருக்கிறார்கள் என்று ஆர்.டி.ஓ.விடம் புகார் செய்த தேவாரம் போலீசு இருதரப்பிலும் தலா 20 பேர் மீது குற்றம் சாட்டியுள்ளது. அருந்ததியினர் சார்பில் தேவாரம் வி.வி.மு. கிளைச் செயலாளர் தோழர். பாக்கியராஜையும் நயவஞ்சகமாகச் சேர்த்துள்ளது போலீசு!

இப்பிரச்சினைக்குத் தீர்வாக, மேட்டுப்பட்டியில் திறந்தவெளிக் கழிப்பிடப் பாதையில், தனிச் சாலை அமைத்துத் தருவதாகவும், இப்பாதை வழியே அருந்ததியர் பிணத்தை எடுத்துச் செல்லுங்கள் எனவும் அதிகாரிகள் கூறினர். "இதுவும் ஒரு தீண்டாமைக் கொடுமைதான்" என்று மறுத்ததால்தான், வழக்கு போட்டு அலையவிட்டுப் பழி வாங்கத் துடிக்கின்றனர் அதிகாரிகளும் போலீசும்!

அரசு அதிகாரிகளின் மேல்சாதி வெறிக்குத் துணை போகும் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது வி.வி.மு. ●

# போராட வி.வி.மு. புகழ் தேட மார்க்சிஸ்டுகள்!

கடந்த ஒரு வருடமாக, மேட்டுப்பட்டி பிரச்சினையின் தொடக்கத்திலிருந்து அருந்ததியின மக்களின் கோரிக்கைக்கு ஆதரவளிப்பதோடு, அம்மக்களுடன் இணைந்து போராடியும் வருகிறது வி.வி.மு! வி.வி.மு.வின் உறுதியான செயல்பாட்டினால் அருந்ததியின மக்களும் பலம்பெற்றுச் சமரசமின்றி இன்று வரை போராடி வருகின்றனர்.

ஆனால், இரண்டு அமைதிப் பேச்சு வார்த்தையில் மட்டும் கையெழுத்துப் போட்டுவிட்டு, மேட்டுப்பட்டி ஊர் மண்ணைக் கூட மிதிக்காமல் ஓடிப்போன சி.பி.எம். கட்சியினர், "மேட்டுப்பட்டிப் பிரச்சினையைத் தாங்கள் கையிலெடுத்துப் போராடியதால்தான் பிணத்தை ஊர் பொதுப்பாதையில் எடுத்துச் சென்றதாக" அப்பட்டமான பொய்யை பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

உத்தமபாளையம் தாசில்தார் அலுவலகம் முன்பு கடந்த 5.7.02 அன்று நடந்த சி.பி.எம். ஆர்ப்பாட்டத்தில் மதுரை புறநகர் மாவட்டச் செயலர் லாசர், தேனி மாவட்ட செயலர் ராஜப்பன் போன்றவர்கள் "தமிழகம் முழுவதும் தீண்டாமைக்கு எதிராகத் தாங்கள் போராடி வருவதாகவும், அடுத்து மேட்டுப்பட்டியில் அருந்ததியர் பிணம் விழுந்தால் எங்கள் தோளில்தான் சுமந்து செல்வோம்" எனவும் சவடால் அடித்தனர்.

வி.வி.மு.வின் பங்களிப்பை நன்கு தெரிந்தே இருட்டடிப்புச் செய்து அரசியல் நாணயம் துளியுமற்ற முறையில் நடந்து கொண்டதோடு, தீக்கதிர் செய்தியிலும் இவ்வாறே பிரசுரித்துள்ளனர். இழவு வீட்டு வாசற்படியைக் கூட மிதிக்காத இந்தச் சூராதிசூரர்கள், பிணத்தைத் தோளில் தூக்கிச் செல்வோம் என்பது நல்ல கோமாளித்தனம் தான்! ●

# ஆர்.டி.ஓ. விசாரணை: அலைக்கழித்துக் கொல்லும் தந்திரம்!

"தீண்டாமைக்கெதிரான போராட்டங்களை சட்டபூர்வமாகவே முறியடித்துத் தீண்டாமையை நிலைநாட்டுவது எப்படி" என்ற தந்திரத்தை ஒரு நுண்கலையாகவே வளர்த்திருக்கின்றனர் வருவாய்த்துறை மற்றும் போலீசு அதிகாரிகள்.

ஈரோடு மாவட்டம், கொடுமணல் குப்பம்பாளையம் கிராமத்தில் அருந்ததியரின மக்கள் மீதான கவுண்டர் சாதிவெறியர்களின் தாக்குதலுக்கு எதிராக அப்பகுதியைச் சேர்ந்த புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணித் தோழர்கள் நடத்தி வரும் போராட்டத்தை அதிகார வர்க்கமும் போலீசும் கையாண்டு வரும் முறை இதற்கொரு உதாரணம்.

சென்ற ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தனக்கெதிராக வேலை செய்த அருந்ததியரினத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம், மாணிக்கம் ஆகியோர் மீது ஆத்திரம் கொண்டிருந்தனர் ஊராட்சி மன்றத் தலைவர் கொளந்தசாமி தலைமையிலான சாதிவெறியர்கள்.

சென்ற மார்ச் மாதம் சொக்கலிங்கம், மாணிக்கம் ஆகியோர் குளத்தில் மீன்பிடிக்கப் போட்டிருந்த வலையைத் திருடி வைத்துக் கொண்டு, அதைத் திருப்பித் தருவதாகச் சொல்லித் தங்கள் வீட்டுக்கு அழைத்து அவர்கள் இருவர் மீதும் கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருக்கிறது இந்தக் கும்பல். அவர்கள் ஈரோடு அரசு மருத்துவமனையில் இரண்டு வாரங்கள் சிகிச்சை பெற்றனர்.

12 பேர் மீது தீண்டாமைக் குற்றத்தின் கீழ் புகார் கொடுத்தும் இரண்டு பேர் மீது மட்டுமே வழக்கு பதிவு செய்தது போலீசு. அவர்களும் முன் ஜாமீனில் வெளியே இருந்து கொண்டனர். "மீதமுள்ளவர்களையும் கைது செய்யாவிடில் அவர்களது வீடுகளை முற்றுகையிடுவோம்" என்று அறிவித்தது பு.மா.இ.மு. உடனே, தீரன் வெங்கட் மற்றும் 24 பேர் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாகவும் சாதிக் கலவரத்தைத் தூண்டுவதாகவும் வழக்குப் பதிவு செய்திருக்கிறது போலீசு.

அடுத்து பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டி ஆர்.டி.ஓ. விசாரணை. தீண்டாமைக் கொடுமையால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட மக்களை, வாரம் ஒரு வாய்தா போட்டு, இழுத்தடிக்க இது ஒரு தந்திரம். அன்றாடம் வேலை தேடி உழைத்து வயிற்றைக் கழுவும் ஏழைகளின் பிழைப்பைக் கெடுத்து, அலையவிட்டுச் செலவு வைத்து, ஆர்.டி.ஓ. அலுவலக வாயிலில் நாள் முழுவதும் தவமிருந்தே சாக வைத்தால் வயிற்றுக் கொடுமை தாங்காமல் வழிக்கு வந்துவிடுவார்கள்; 'பட்டினிக் கொடுமைக்கு தீண்டாமைக் கொடுமையே தேவலாம்' என்று அடங்கி வழிக்கு வந்து விடுவார்கள் என்பதுதான் ஆர்.டி.ஓ. விசாரணையின் நோக்கம்.

நயமாகப் பேசி ஊருக்குள் வரவழைத்துத் தாக்கியது சாதிவெறியர்களின் தந்திரம்; ஆபீசுக்கு வரவழைத்து 'அடிப்பது' அதிகார வர்க்கத்தின் தந்திரம்! ●



படிப்பகம்

www.padippakam.com



# கல்லறைகளுக்கிடையேயும் வாழ்க்கை

***குஜராத் படுகொலையின் மீது 5 மாதங்கள் நகர்ந்து விட்டன. இந்து மனச்சாட்சியின் மீது தெறித்த குஜராத் முசுலீம்கள் ரத்தம் காய்ந்து கறுத்து விட்டது. மனச்சாட்சியின் ஒரு உரோமம் கூடச் சிலிர்க்கவில்லை. உண்மைகள் தீண்டினால் சிலிர்த்தெழாத மனிதர்கள் கூடக் கதைகளைக் கண்டு கண் கலங்குகிறார்கள் என்பதால் ஒரு கதை சொல்லிப் பார்ப்போம். குஜராத்தின் இரண்டு லட்சம் முசுலீம் அகதிகளில் இது ஒரேயொரு அகதியின் கதை. கற்பனைக் கதையல்ல, உண்மைக் கதைதான். என்ன செய்வது, எதார்த்தம் கற்பனையை விஞ்சி விடும் காலமிது.***

★★★

அகமதாபாத். சுட்டெரிக்கும் வெய்யில். சோகம் ததும்பும் தனிமைத் துயர் மிகுந்த கோடை. ஷா-ஏ-ஆலம் தர்காவின் நெடிய கதவுகளையே வெறித்தபடி பகல் முழுக்க அமர்ந்திருக்கிறாரே, அவர்தான் காலேத் நூர் மொகம்மது. குஜராத்தைக் குறுக்கும் நெடுக்குமாய்க் கிழித்துப் போட்ட இனப்படுகொலை நடந்து இரு மாதங்களாகவே அவர் அப்படித்தான் இருக்கிறார்.

தனது எழுபத்தைந்து ஆண்டுகால வாழ்க்கையின் நெடும்பயணத்தைத் திரும்பிப் பார்க்கிறார் காலேத். அடுத்தடுத்து நடந்த மதக்கலவரங்கள்தான் அவருடைய வாழ்வின் பல கட்டங்களைப் பிரிக்கின்ற அடையாளக் கற்களாக நிற்கின்றன. சாதாரணமாக எல்லோரும் தங்கள் குடும்பங்களில் நடக்கும் பிறப்புகள், இறப்புகள், திருமணங்களைப் பற்றிப் பேசுவார்களே அதுபோல இவர் மதக்கலவரங்கள் பற்றிப் பேசுகிறார். சிதறிக் கிடக்கும் ரத்தத்தின் தடங்கள் - அவைதான் அவரது வாழ்க்கையின் 'மலரும்' நினைவுகள்.

காலேத் சொல்கிறார்: "நானும் எத்தனையோ கலவரங்களைப் பார்த்து விட்டேன். ஒவ்வொரு முறையும் ஒருவாறு தேற்றிக் கொண்டு நகர்ந்தோம். ஆனால் இந்த முறை நடந்த கலவரம் முற்றிலும் வேறு மாதிரியானது. இன்னும் என் உடம்பில் மிச்சம் வலு இருக்கத்தான் செய்கிறது; ஆனாலும் இந்தமுறை நடந்த கலவரம் என் முதுகை முறித்துவிட்டது; மன உரத்தை நசுக்கித் தேய்த்து விட்டது. எங்கள் ஆட்களை இப்படி ஈவிரக்கமில்



படிப்பகம்

www.padippakam.com

லாமல் உயிரோடு கொளுத்தியதை என்றுமே நாங்கள் பார்த்ததில்லை - பிஞ்சுக் குழந்தைகளை, சின்னஞ்சிறுசுகளைக் கூடவா கொன்று போடுவார்கள்? திரள் திரளாகவா பெண்களைக் கற்பழிப்பார்கள்? பல ஆயிரம்பேர் இப்படி வீடு வாசல் இழந்து நிர்க்கதியாக நின்றதை நாங்கள் பார்த்ததேயில்லை.

''எல்லாக் கொடுமைகளையும் இந்தக் கண்களாலேயே பார்த்தேன். பயங்கர மான சம்பவங்களைப் பற்றி மற்றவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள்; ஆனால் நான் அவைகளை நேருக்குநேர் பார்த்தேன். இப்போதெல்லாம் நான் தூங்க முயற்சிக்கிறேன்; நினைவுகள் விரட்டுகின்றன; கனவுகளில் அவை ஓயாது மீண்டும் மீண்டும் வந்து என்னை அலைக்கழிக்கின்றன. நிம்மதியில்லாத இரவுகள் - நான் விழித்துக் கொண்டே இருக்கிறேன். தொழுதால் நிம்மதி கிடைக்கும் என்று நம்பித் தொழுகிறேன். தொழுகையின் போதும் பெண்களின் அலறல்களும், குழந்தைகளின் கதறல்களும் தான் காதில் கேட்கின்றன. எனது மனம் சில்லுச் சில்லாக நொறுங்கிக் கொண்டேயிருக்கிறது. ஐயா, என்னால் முடியவில்லை... மனிதச் சகிப்புத் தன்மையின் எல்லை மீறி விட்டது...''

***

கர்நாடகாவில் குல்பர்கா மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் பிறந்தவர் காலேத். அவரது பெற்றோர்கள் விவசாயக் கூலிகள். மாதம் ஒன்றுக்குப் பத்து ரூபாய் கிடைக்கும். அவ்வளவுதான். அதுவும் நிச்சயமில்லை. அவரது தந்தை பொழுதுபோக்காகக் குத்துச் சண்டை கற்றுக் கொண்டார்; உடற்பயிற்சி செய்து கட்டுமஸ்தாக இருப்பார். அவர் வழியிலேயே காலேதும் வளர்ந்தார். அண்ணன் - தங்கைகளாய் 6 குழந்தைகளில் காலேத் மூத்தவர்.

பிரிவினைக்காலக் கலவரம் நாடு முழுக்க ரத்த ரேகைகளை விரித்தது போலவே குல்பர்காவிலும் படர்ந்தது. இந்துவெறியர்கள் அவரது தந்தையைக் கொன்றார்கள்; அவரது கூட்டுக் குடும்பத்தின் எல்லா ஆண் உறுப்பினர்களையும் கொன்று விட்டார்கள் - அதாவது அவரது அப்பாவின் இரண்டு சகோதரர்கள், ஒரு மாமா உட்பட.

காலேத் பள்ளிக்கூடத்தில் கால் வைத்ததில்லை; அந்த இளம் பருவத்திலேயே மொத்தக் குடும்ப பாரத்தையும் சுமந்து கொண்டார். குல்பர்காவின் பஞ்ச பூமியில் வேலைக்கும் பஞ்சம்; அம்மாவோடும், ஐந்து சகோதர - சகோதரிகளோடும் செல்வங் கொழிக்கும் தொழில் துறை நகரான அகமதாபாத்திற்கு பிழைப்பைத் தேடி வந்து சேர்ந்தார்.

ஆரம்பத்தில் அவர் செய்யாத வேலை இல்லை - ஓட்டல்கள், திருவிழாக்கள், மகாநாடுகள், 12 அணா (75 காசு) கூலி வாங்கிக் கொண்டு கல்லறை தோண்டும் வேலை, இப்படிப் பல உதிரி வேலைகள். 1962-இல் பெரியப்பா மகளைத் திருமணம் செய்து கொண்டு, நரோடாவுக்கு இடம் மாறினார். சில ஆண்டுகள் கழிந்து சேமித்த பணத்தில் இரண்டு வீடுகள் கட்டினார். தன் மனைவி பேரில் ஒன்று; மகன் ஷர்முதீன் பேரில் இன்னொன்று.

காலேத் வீடுகளுக்கு வண்ணம் பூசுவதில் கை தேர்ந்தவர். முதலில் தன் மகனுக்கு சுண்ணாம்பு அடிக்கவும், பிறகு வண்ணம் பூசவும் கற்றுக் கொடுத்தார். வெகு சீக்கிரத்தில், அவர் சிறு ஒப்பந்தக்காரராக வளர்ந்தார்; அவர் கீழே இரண்டு மூன்று பேர் வேலை செய்தார்கள். குறிப்பாக, படேல்கள் மத்தியில் அவருக்கு நல்ல பெயர். ''என் வாழ்நாள் முழுக்க எந்த ஒரு இந்துவையும் நான் பகைத்துக் கொண்டதில்லை'' என்கிறார் காலேத்.

தனது நூறாவது வயதில் கண்மூடும் வரை அவரது அம்மா அவர் கூடவேதான் இருந்தார். இரண்டு சகோதரிகளுக்கும் திருமணம் செய்து கொடுத்தார்; இரண்டு சகோதரர்களுக்கும் வேலை தேடிக் கொடுத்தார். ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார். நல்ல மருமகள்; அவர்களுக்கு ஐந்து வயதில் ஒன்று, இரண்டு வயதில் ஒன்று என்று இரண்டு குழந்தைகள்.

இதுதான் காலேதின் சின்ன உலகம். இன்றைக்கு அதில் மிச்சம் எதுவுமே இல்லை; இனப்படுகொலையின் கொலை வெறி அவர் குடும்பம் முழுவதையும் சூறையாடி விட்டது.

***

பிப்ரவரி 27 அன்று கோத்ராவில் ரயில் எரிப்புக் கொலைகள் நடத்தப்பட்டதைப் பற்றிய செய்திகள் நரோடாவை (அகமதாபாத்திலுள்ள ஒரு சேரிப்பகுதி) எட்டின. எங்கும் பரபரப்பு - தொட்டால் உணர்ந்து கொண்டு விடலாம். இவ்வளவு தொலைவுக்கு நகர்ந்து நரோடாவுக்கா பரவும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ''நரோடாவில் இருக்கின்ற நாங்கள் அத்தனைப் பேருமே உழைப்பாளிகள். வருசக்கணக்காக மதச் சச்சரவே இல்லாமல் அமைதியாக வாழ்ந்து விட்டோம். இங்கே எதுவும் நடந்து விடாது'' என்று நம்பினோம்.

பிப்ரவரி 28 - காலை நேரம், காலேதும், அவரது குடும்பத்தினரும் வீட்டில் இருந்தார்கள். டீ குடித்துக் கொண்டு; சோறு சமைத்துக் கொண்டு. கோத்ரா கொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வி.இ.ப. 'பந்த்' அறிவித்திருந்ததால் யாரும் வெளியே செல்லவில்லை. அந்தக் குடும்பம் முழுக்க வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டது.

திடீரெனத் தாக்குதல் வந்தது கொஞ்சங் கூட எதிர்பார்க்காததால், அது கொடூரமாக இருந்தது. மூன்று லாரி இளைஞர்கள் இறங்கினார்கள். காக்கி கால்சட்டை - காவிமேல் சட்டை. கையில் கத்தியும் திரிசூலமும். ''கொல்லுடா - அடிச்சிக் கொல்லுங்கடா'' கத்திக் கொண்டே லாரியிலிருந்து குதித்தார்கள்.

> *ஆவேசம் வந்தவரைப்போல காலேத் தன் உயிருக்கு உயிராய் நேசித்தவர்களையெல்லாம் தேடினார். கருகிக் கிடந்த உடல்கள் - வெட்டி எறியப்பட்டுத் துண்டுத் துண்டாய்ச் சிதறிய உடல்கள் - அவர் யாரையெல்லாம் நேசித்தாரோ, யாரோடு எல்லாம் வாழ்ந்தாரோ, அவர்கள் யாரையும் அடையாளம் கூடக் காண முடியவில்லை. சிதைந்து கருகிய மிச்சமீதங்களே கிடந்தன. சுழன்று அடர்த்தியாகப் பரவிய புகை - கவிழ்ந்து கொண்டிருந்த மாலை இருள் - அந்தக் கிழவனின் கண்களை முட்டித் திரையிட்ட கண்ணீர் - காலேதால் எந்த உடலையும் அடையாளம் காண முடியவில்லை.*

ஒருகணம் அவர்கள் ரத்தம் உறைந்தது. தீயில் எல்லோருமே தங்கள் வீடுகளிலிருந்து தெறித்து ஓடினார்கள். காலேத் ஒரு பக்கம்; மற்றவர்கள் வேறு பக்கம். அப்போது பிரிந்ததுதான். அச்சத்தால் உணர்விழந்து போன காலேத் ஒருநாள் முழுக்க சாப்பாட்டுக் கடை ஒன்றின் கூரை மீதேறி ஒளிந்து கொண்டிருந்தார்.


மாலையில் அந்தக் கடையும் தாக்கப்பட்டது. கடையில் இருந்த சமையல் எரி



படிப்பகம்

www.padippakam.com

வாயு திறக்கப்பட்டு எரியூட்டப்பட்டது. மறுபடியும் மயிரிழையில் உயிர் தப்பினார் காலேத். சுற்றிலும் புகை. மூச்சு முட்டியது. புகையை விலக்கிக் கொண்டு தட்டுத்தடுமாறி வீட்டை அடைந்தார் காலேத்.



ஷா-ஏ-ஆலம் தர்காவில் மருமகன் ஜாவேதுடன் பெரியவர் காலேத். இருவரும் இன்று ஏதுமற்ற அநாதைகள்.

வீட்டின் அருகே குற்றுயிரும் குலையுயிருமாக அவரது பேரன் ஆசீஃப். ஐந்து வயது. அவனது உடல் அனேகமாக முழுதும் தீய்ந்து விட்டது. ரத்தம் சொட்டச் சொட்டக் கதறிக் கொண்டிருந்தான். மெல்ல அவனைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குப் போனார் காலேத். வீடு இன்னமும் எரிக்கப்படாமல் நின்றிருந்தது. கொஞ்சம் ரொட்டியைத் தேடி எடுத்து அவனுக்கு ஊட்டினார். அவரால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆசீஃப் சொன்னான்: ''அப்பு தாத்தா, சத்தம் போட்டு அழாதே. உன்னையும் கொன்னுடுவாங்க. எல்லாரையும் எரிச்சிட்டாங்க தாத்தா. அம்மா, அப்பா, பாட்டி, சின்ன அண்ணன் எல்லாரையும். நீயும் நானும் தான் மிச்சமிருக்கோம்'' - தாத்தாவின் கரங்களிலேயே அடுத்த சில நிமிடங்களில் அவனும் செத்துப் போனான்.

''அஞ்சு வயசு தான் அவனுக்கு. அவ்வளவு அறிவு. கடைசி நிமிசம் வரைக்கும் என்னைப்பற்றித்தான் அவன் கவலைப்பட்டான்'' என்று நினைவு கூர்ந்தார் காலேத்.

பிறகு ஆவேசம் வந்தவரைப்போல காலேத் தன் உயிருக்கு உயிராய் நேசித்தவர்களையெல்லாம் தேடினார். கருகிக் கிடந்த உடல்கள் - வெட்டி எறியப்பட்டுத் துண்டுத்துண்டாய்ச் சிதறிய உடல்கள் - அவர் யாரையெல்லாம் நேசித்தாரோ, யாரோடெல்லாம் வாழ்ந்தாரோ, அவர்கள் யாரையும் அடையாளம் கூடக் காண முடியவில்லை. சிதைந்து கருகிய மிச்சமீதங்களே கிடந்தன. சுழன்று அடர்த்தியாகப் பரவிய புகை - கவிழ்ந்து கொண்டிருந்த மாலை இருள் - அந்தக் கிழவனின் கண்களை முட்டித் திரையிட்ட கண்ணீர் - காலேதால் எந்த உடலையும் அடையாளம் காண முடியவில்லை.

மகள் கௌசரின் உடல் மட்டுமே தேடிக் கிடைத்தது. எட்டுமாதக் கர்ப்பிணி. எந்த நிமிடமும் பிரசவித்து விடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். காலேத் அவளது உடலைக் கண்டபோது, அவள் வாயில் நுரை தள்ளியிருந்தது. வயிறு கிழிபட்டிருந்தது; நன்றாக வளர்ந்த குழந்தை கருப்பையிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்டு அருகிலேயே கொளுத்தப்பட்டிருந்தது.

அந்தக் கொலைக்களத்தின் இருட்டுக்குள்ளேயே இரவு முழுவதும் ஒளிந்து கொண்டிருந்தார் காலேத். அவரைப் போல தப்பிய சில பேரும் ஒளிந்திருந்தார்கள். விடியும் வரை உயிரோடு இருப்போமா என்ற நிச்சயமில்லாமலேயே விடிவதற்காக விழித்திருந்தார்கள். முதல் செய்தி கிசுகிசுத்த குரல்கள் வழியாக அவரையும் எட்டியது. ''ஷா-ஏ-ஆலம் தர்காவிலிருந்து லாரி வந்து கொண்டிருக்கிறது. பிழைத்திருப்பவர்களையாவது காப்பாற்றி அழைத்துச் செல்லப் போகிறார்கள்.''

வண்டியும் வந்தது. தப்பிப் பிழைத்தவர்களின் உடல்கள் லாரிக்குள் திணிக்கப்பட்டன. தர்கா என்ற சரணாலயத்திற்கு அவர்கள் சென்றார்கள். தர்காவில் தொழுகைக்காக ஒதுக்கப்பட்ட கட்டாந்தரையில் படுத்துக் கொண்டார்கள். உயிர் தப்பியவர்கள் தங்கள் உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்கான அன்றாட வேலைகளில் ஈடுபட்டார்கள்; குழந்தைகளுக்குப் பால், காயம்பட்டவர்களுக்கு மருந்து, மாத்திரைகள், காலைக்கடன் கழிப்பதற்கான இடங்கள், இத்தனைநாள் பர்தாவில் இருந்த பெண்களோ குளிக்க மறைவான இடம் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் இவர்கள் யாரோடும் ஒட்டாமல் காலேத் தன்னந்தனியாக ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார். ''பெரிய கூட்டுக் குடும்பத்தில் தன்னைத்தவிர இன்னும் ஒரே ஒரு ஜீவனாவது தப்பிப் பிழைத்திருக்காதா?'' அவர் ஏங்கினார். ''எல்லாருமே செத்துட்டாங்க அப்பு தாத்தா'' என்று பேரன் சொன்னான். ''இருந்தாலும் யாராவது ஒருத்தர் பிழைத்திருந்தால்?'' - அவர் காத்திருந்தார்.

முகாமுக்கு வருபவர்களையெல்லாம் பார்வையிலேயே தள்ளி ஒவ்வொரு முகமாய்த் தேடினார். ஒருவாரம் ஓடிவிட்டது. ஒருநாள்... இதயமே துள்ளி வெளியே விழுந்து விடும்போல இருந்தது காலேதுக்கு. அவருடைய மைத்துனியின் மகன் ஜாவேதுதான் வந்து கொண்டிருந்தான்.

ஓடிச் சென்று ஜாவேதை ஆரத் தழுவிக் கொண்டார். ''யாரை மொத்தக் குடும்பமும் 'உதவாக்கரை' என்று கை கழுவியிருந்ததோ அந்த ஜாவேதுப் பயல். இவனைப் பிழைக்க வைக்க அல்லா தீர்மானித்திருக்கிறான்!''

ஜாவேது படிக்க மாட்டான். சின்ன வயதிலேயே புகையிலை போடுவான்; 12 வயதிலேயே ஷேர் ஆட்டோவில் கண்டக்டராக வேலை பார்த்தான். இப்போது அவன் வயது பதினான்கு; அவனுக்கென்று மிச்சமிருப்பது இந்த முன்கோபம் பிடித்த மாமா காலேத் மட்டும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

தன் அம்மா சாகும் கடைசி நிமிசம் வரை கூடவே இருந்தானாம். ''பந்து போல உருண்டையாக வந்த தீ அவளை விழுங்கிவிட்டது'' என்று அவன் விவரித்தான். நரோடா - கதறி, கத்தி தப்பி ஓடிய கூட்டம் முழுவதும் வெளியே சென்று விடாமல் நாலாபக்கமும் மறிக்கப்பட்டது. அனேகமாக எல்லா இடங்களிலும் போலீசு அவர்களை வழிமறித்து விரட்டி விரட்டிக் கொலைகாரர்களிடம் தள்ளி விட்டது.

ஜாவேதின் குடும்பமே மாட்டிக் கொண்டது. எல்லோர் மீதும் பெட்ரோலை ஊற்றினார்கள். முதலில் குழந்தைகள், பிறகு பெரியவர்கள், அப்புறம் பெண்கள்... வரிசையாக தீ வைத்தார்கள்.

கும்பலில் பலபேர் போதையிலிருந்தார்கள். எல்லாரும் வெளியாட்கள். ஆனால் அவர்களை அழைத்து வந்து வீட்டை அடையாளம் காட்டி விட்டவர்களென்னவோ பக்கத்து வீட்டுக்காரர்கள் (இந்துக்கள்)தான்... சுற்றிலுமுள்ள மாடிகளில் நின்று கொண்டு, தீ அணைந்து விடாமலிருக்க விறகுக் கட்டைகளையும் போர்வைகளையும் மேலிருந்து எறிந்து கொண்டிருந்தார்கள்.

ஜாவேதின் தலைமுடி தீயில் கருகி விட்டது. அவனது கால்கள் எரிக்கப்பட்டிருந்தன; கால்சட்டை எரிந்திருந்தது; எப்படித் தப்பினானோ தெரியவில்லை. நேரே வீட்டுக்குள் போய் வேறு உடை எடுத்துப் போட்டுக் கொண்டு - பல கி.மீ. தூரம் ஓடினான். வழி எங்கும் மரண ஓலம். வலியால் துடித்தவரின் உதவி கோரும் கதறல்கள்... கொலை செய்யத் துடித்துக் கொண்டு 'வெட்டு, கொல்லு' என்று ரத்த கோஷங்களோடு திரிந்து கொண்டிருந்த திரிசூலக் கும்பல்... ஜாவேது நிற்காமல் ஓடியிருக்கிறான்... எப்படியோ அவனுடைய முதலாளியான சேட்டு வீட்டிற்குப் போய் விழுந்தான்.

சேட்டு ஒரு இந்து. தீக்காயத்திலிருந்து குருதி கொப்புளிக்கப் பரிதாபமாக நின்ற ஜாவேதைப் பார்க்க அவருக்கு மனம் பொறுக்கவில்லை; உடனே அரசு மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்று விட்டார்.

ஆறு நாட்கள் கழித்து குணமான ஜாவேதை ஷா-ஏ-ஆலம் தர்காவில் சேர்க்க அழைத்துச் சென்றார் மருத்துவமனை உதவியாளர். அங்குதான் கிழவன் காலேதைப் பார்த்தான் ஜாவேது. இப்போது ஒருவருக்கொருவர் ஆறுதலும், தேறுதலும்.

காலேத் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். தனது வீடுகளை வந்த

**ஜாவேதின் தலைமுடி தீயில் கருகிவிட்டது. அவனது கால்கள் எரிக்கப்பட்டிருந்தன; கால்சட்டை எரிந்திருந்தது; எப்படித் தப்பினானோ தெரியவில்லை. நேரே வீட்டுக்குள் போய் வேறு உடை எடுத்துப் போட்டுக் கொண்டு - பல கி.மீ. தூரம் ஓடினான். வழி எங்கும் மரண ஓலம். வலியால் துடித்தவரின் உதவி கோரும் கதறல்கள்... கொலை செய்யத் துடித்துக் கொண்டு 'வெட்டு, கொல்லு' என்று ரத்த கோஷங்களோடு திரிந்து கொண்டிருந்த திரிசூலக் கும்பல்... ஜாவேது நிற்காமல் ஓடியிருக்கிறான்...**

விலைக்கு விற்று விடுவது; உறவினர் சாவுக்கு எப்படியாவது நட்டஈடு பெறுவது, மறுபடி குல்பர்கா மாவட்டத்தில் உள்ள கிராமத்துக்கு ஜாவேதுடன் திரும்பி விடுவது; இனி அங்கேயே வாழ்வது.

அங்கே வேலை ஏதும் கிடைக்காது; ஆனால் அவர்கள் இருவருக்கும் அமைதி கிடைக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆனால் நட்டஈடுதான் கண்ணாமுச்சி ஆடுகிறது. பேரன் ஆசிஃபுக்கு மட்டும்தான் அவரால் இறப்புச் சான்றிதழ் வாங்க முடிந்தது. மற்றவர்கள் - ஆள் அடையாளம் தெரியாமல் பொதுக் கல்லறையில் புதைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஏது இறப்புச் சான்றிதழ்? அவர்களை எப்படி அடையாளம் காண்பது? அவர்களையெல்லாம் ''காணாமல் போனவர்கள்'' என்ற கணக்கில் சேர்த்து விட்டார்களாம். அதனால் நட்டஈடு கிடையாதாம்.

கிராமத்தில் காலேதின் வயதான மாமியார்தான் இருக்கிறாள். அவரைத் தொடர்பு கொண்டு காலேதும், ஜாவேதும் பேசினார்கள். எல்லோரும் உயிரோடு நல்லபடி இருப்பதாக உறுதி சொன்னார்கள். ''உண்மை தெரிந்தால் அவளும் செத்து விடுவாள்'' என்றான் ஜாவேத். இந்தத் துயரத்தின் பின்னாலிருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைப் புரிந்து கொள்ளாத தோரணையில் அவன் பேசினான்.

இனி வாழ்க்கையோடு காலேதைப் பிணைக்கும் ஒரே பந்தம் ஜாவேது மட்டுமே; இந்தப் பந்தமும் இற்றுப் போன மெல்லிய கயிறு போல ஆடிக் கொண்டிருக்கிறது. முன்பு அவன் ஓர் உதவாக்கரை; பெற்றோர் அவனைப் பற்றிக் கவலைப்பட்டார்கள்; மனக்கசப்பும் அடைந்தார்கள் - அவன் அப்படியும் உருப்படவில்லை. அதே ஜாவேது இப்போது சொல்கிறான்: ''நான் ஒரு நல்ல மனிதனாக வளரவேண்டும் - உயிரோடிருந்தால் அவர்கள் பெருமைப்படும்படி என்ன செய்திருப்பேனோ, அவர்கள் பெயருக்குப் புகழும் பெருமையும் எப்படித் தேடித் தந்திருப்பேனோ அதே போல இப்போது செய்வேன்.''

ஜாவேது இப்போது புகையிலை மெல்லுவதில்லை. முகம் கழுவி எண்ணெய் தடவித் தலைசீவித் திருத்தமாக இருந்தான். முகாமில் தொண்டர் குழுவில் சேர்ந்து கொண்டு முறைமாற்றி 10,000 பேருக்குச் சளைக்காமல் உணவு பரிமாறினான்; அனேகமாக நாள் முழுக்க சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தான்.

காலேத் தனக்குத்தானே அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்: ''என்னுடைய மிக மோசமான எதிரிக்குக்கூட இப்படி நேர்ந்துவிடக் கூடாது. நான் அனுபவித்ததை அவர்கள் அனுபவித்து விடக் கூடாது.''

முகாமின் வராந்தாவில் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது வெயிலின் சூடு ஏறி அனல் காற்று எரித்தது. தர்காவின் அருகே இருந்த கல்லறையின் நிழலான இடத்துக்கு மாறினோம். அங்கே இளம் தொண்டர்கள் தற்காலிகமான பள்ளிக்கூடத்தை உருவாக்கியிருந்தார்கள் - படிக்கவும் விளையாடவும். அப்படியாவது அந்தச் சின்னஞ்சிறுசுகள் - தங்கள் வாழ்க்கையில் என்றென்றும் மறக்க முடியாத மரபுச் சுமையாகப் பெற்றுவிட்ட நினைவுகளின் பயங்கரத்தைக் கொஞ்ச நேரம் மறந்து இருப்பார்களல்லவா?

அதிர்ச்சிகளின் அடையாளம் வடுவாய்ப் பதிந்திருக்கும் அந்தக் குழந்தைகளின் சிரிப்பொலி கல்லறைகளுக்கு மத்தியிலிருந்து தெறித்து மிதந்து வந்தது. ஆச்சரியத்தோடு நாங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

**(ஹர்ஷ் மந்தேர், ஃபிரண்ட்லைன் ஆங்கில இதழில் (ஜூலை 5, 2002) எழுதிய கட்டுரை சுருக்கித் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.)**



படிப்பகம்

www.padippakam.com



# சிதம்பர ரகசியம்

"பூ மொழம் எப்படிம்மா?"

''ரெண்டார்ருவாம்மா, அஞ்சு மொழம் பத்ருவான்னு தர்றேன் வாங்கிக் குங்கம்மா!''

''பத்து ரூவாய்க்கு ஆறு மொழம்னு போட்டுக் குடுங்க.''

''என்னம்மா இப்படிக் கேக்குறீங்க... கட்டாதும்மா.'' பூ விற்கும் பெண் கெஞ்சு வது போல் ராகம் இழுத்தாள்.

''எல்லாம் கட்டும் தாங்க'' பட்டுப்பு டவை சரசரக்க ஆணையிடுவது போல் இருந்தது அந்தப் பெண்ணின் குரல். பக்கத்தில் நின்ற அவளது கணவனும் சேர்ந்து கொண்டான். ''சிதம்பரம் கோயில சுத்திப் பாக்க மெட்ராஸ்லேந்து வர்றோம். வர்ற வியாபாரத்த தடுக்கா தம்மா.''

''நான் எங்க சார் தடுத்தேன். நானும் உங்களுக்கு கொடுக்கறதுக்குத்தான இந்த கெஞ்சு கெஞ்சுறேன்.''

''கொழந்தையெல்லாம் வேற நிக்குது சீக்கிரம் ஆறு மொழம்னு போட்டுக் கொடுத்துட்டு நீயும் வியாபாரத்த முடிச் சுட்டு போகலாம்ல.. என்னமோ தங்க வியாபாரம் மாதிரி ரொம்பக் கறாரா பேசுனா எப்படி?''

''தங்கத்தகூட திரும்பக் கொடுத்து காசாக்கிடலாம்மா இந்த மல்லிப்பூவு மூட்டையை மாரு வலிக்கத் தூக்கிட்டு வந்து சாயங்காலம்குள்ள விக்கலேன்னு வச்சுக்குங்க... யோட்ட மொதலுக்குச் சாக வேண்டியதுதான்.''

''நீ வேற ஏம்மா அபசகுனமா பேசிட்டு, முடிஞ்சா குடு...! ஏய் உனக்கு இதவுட்டா வேற கடை இல்லியா?'' மனைவிமேல் எரிந்து விழுந்தவர், ''மெட்ராஸ்ல கோயம்பேடு மார்க்கெட்ல பூ சிரிப்பா சிரிக்குது. இங்க என்னவோ இவ்ளோ கிராக்கி'' என்று முனக வேறு செய்தார்.

''என்ன சார் இப்படிப் பேசுறீங்க... ஆறு மொழத்துக்காக கோயம்பேடு போக முடியுமா?''

''ஏங்க நீங்க சும்மா இருங்க'' என்று கணவனை அடக்கியவள், ''கடைசியா கேக்குறேன். ஆறு மொழம் பத்து ரூவான்னு தா. சும்மா சொன்னதையே சொல்லிட்டு இருக்காத. ஆமாம்.''

''யாரும்மா சொன்னதையே சொல்றது? மனசாட்சியில்லாம கேட்குறி யேம்மா. கேட்கற மாறி கொரைச்சு கொடுக்கறதுக்கு நான் ஒண்ணும் பூவ கொண்டைல வச்சுட்டு வரலம்மா. கூடைல வச்சுதான் தூக்கிட்டு வரேன். பஸ்சுகாரனுக்கு அழுது, கடைத்தெருவுல சீட்டுக்காரனுக்கு அழுது ஒரு மூணு ரூவாயப் பாக்கறதுக்குள்ள நாங்க படற மொக்கத்தனம் எங்களுக்குத்தான் தெரியும். நீ பூவே வாங்க வேணாம் பேசாம போம்மா, சும்மா வயித்தெரிச்சல கிளப்பிகிட்டு.''

தள்ளி நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணின் கணவருக்குச் சுருக்கென்று கோபம் வந்தது. ''ஏய் இங்க வா. உனக்கு பூ வாங்க வேற கடையே கிடையா்தா? என்று அதட்டியவர் ஒரு மொழம் பூவுக்கு அந்தப் பொம்பள என்ன சாமர்த்தியமா அளக்கரா பாரு! பட்டுப் புடவை, பேண்ட் சட்டைல வேற வந்திருக்கோமா! நைசா ஏமாத்திடலாம்னு நினைக்கிறா.''

''ஊம், ஏமாத்துவா? நம்மகிட்ட முடி யுமா? அதான் நானும் பதிலுக்குப் பேசிட் டிருந்தேன்!'' புத்திசாலித்தனமாகத் தப்பித்துக் கொண்டவர்கள் போல இரு வரும் நகர்ந்தனர்.

***

'அந்தக் காலத்துல கோவில என்னமா கட்டி வைச்சிருக்கான் பாரு!' என்று வியந் தபடியே போனவர்களை சன்னிதா னத்தில் நின்று கொண்டிருந்த ஒரு தீட்சிதர் ஆவலுடன் வரவேற்றார். 'வாங்கோ, நன்னா ஸ்வாமி தரிசனம் பண்ணுங்கோ' என்று ஒரு கற்பூரத்தைக் கொளுத்திய படியே, 'இது ஆரம், இது



படிப்பகம்

www.padippakam.com

சங்கு. பக்கத்தில நிக்கறது பத்மாவதி தாயார், என்ன சாருக்கு மெட்ராசா. இந்த கோயில்ல ஒரு சிறப்பு, நடராஜர் சன்னி தானத்துக்கு அருகிலேயே பெருமாளும் இருக்கார். தீர்த்தம் வாங்கிக்குங்கோ. இந்தாம்மா துளசிய புடிங்கோ' தீட்சிதர் வெகுவாகக் கவனிக்க, சாமி கும்பிட் டவர் மனைவியிடம் கண்ணால் ஜாடை காட்டினார். அந்தப் பெண் ஒரு இரண்டு ரூபாயை எடுத்துக் காட்ட, சத்தமில் லாமல் எரிச்சலானவர் என்கிட்டேயே இருக்கு என்பது போல் ஜாடை காட்டி விட்டு ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை கனமாக எடுத்து தீட்சதரின் தட்டில் போட்டார். ''க்ஷேமமா இருங்கோ, அடிக் கடி வாங்கோ'', தீட்சிதரின் முகத்தில் ஒளி பரவியது. 'பிச்சக்காரன் மாதிரி ரெண்டு ரூபாய காட்றியே, ஐந்து ரூவா போட்டாதான நமக்கு ஒரு கௌரவம்' என்று மனைவியிடம் செல்லமாகக் கடிந்து கொண்டு பிரகாரத்தில் பெரிய தாகத் தெரிந்த பிள்ளையார் சன்னிதானத் திற்கு நகர்ந்தார்கள்.

பிள்ளையார் சன்னிதானத்திற்குள் ஒரு அரசு அதிகாரி குடும்பம் அங்கிருந்த தீட்சிதரால் ஏகமாகக் கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இவர்கள் நெருங்கிய உடனேயே தீட்சிதர், ''வாங்கோ, வாங்கோ இவர் பிரத்திபெற்ற வினாயகர், விசேஷ பிரசாதம் பத்து ரூவா, வாங்கிக் குங்கோ. தோசமெல்லாம் தூரப் போயிடும்'' சொல்லிக் கொண்டே தீட்சிதர் பதிலை எதிர்பார்க்காமல் ஒரு கையடக்க பிளாஸ்டிக் குவளையை நீட்ட எல்லோர் மத்தியிலும் மறுக்க மனமின்றி அவசரமாகப் பத்து ரூபாயைக் கொடுத்து வாங்கிக் கொண்டார்.

கூட இருந்த மனைவிக்கு அதில் என்ன இருக்கிறது என்ற ஆர்வம் மேலிட ''இங்கதாங்க, இங்கதாங்க'' என்று கேட்க ஏற்கெனவே எரிச்சலில் இருந்தவர் ''ச்சே கொஞ்சம் சும்மாயிருக்கறியா, நை நைன்னு புடிங்கிகிட்டு, வெளில வா தர்றேன்'' என்று யார் மேலோ காட்ட வேண்டிய கோபத்தை மனைவி மேல் காட்டினார்.

கோவிலுக்கு வெளியே செருப்பை விட்ட இடத்தில் 'அதக் குடுங்க' என்று அவசரமாகப் பிரசாதக் குவளையைப் பிடுங்கிப் பார்த்தவள், ''ஐய்யயோ என்னங்க இது அநியாயமா இருக்கு, ஒரு துன்னூறு பொட்டலம், ஒரு குங்குமப் பொட்டலம், இரண்டு கல்கண்டு, இதுக்கு பத்து ரூவாயா?'' சத்தமாய்ப் பேச ''தே, இங்க கத்தாதே!'' என்று எரிச்சலை வெளிக்காட்டவும் முடியாத அவரின் அவஸ்தையைப் பார்த்த பூக்காரிக்கு சிரிப்பு பீறிட்டு வந்தது. ''ராணி அக்கா பாத்தியா கடைசில எங்கபோய் ஏமாறு துங்கன்னு''

''யக்கா நேர்மையா பேசினாலும் நாம நேர் கொண்டையில்ல போட்டு ருக்கோம். நமக்கு மதிப்பு கம்மிதான். உள்ளார சைடு கொண்டையில்ல, அதான் போய் சாயிதுங்க.''

அவர்களது அந்தச் சிரிப்பு அடுத்த டுத்த பூக்கடைகளிலும் பூத்துக் குலுங்கி யது.

● சுடர் விழி

## மாற்று!

*நேற்று தைத்த சட்டை*
*இன்று பழசாகி விடுகிறது.*
*மாற்றுக்கு ஒரு புதுச்சட்டை*
*எடுத்தால்தான்*
*கல்லூரிக்குப் போவேனென்று*
*ஆணையிடுகிறான் பையன்.*

*பழைய டிசைனையே*
*போட்டுப் போட்டு*
*அலுத்துப் போச்சு*
*மாற்றிக் கொள்ள புது டிசைனில்*
*ஒரு தொங்கட்டான்*
*எடுக்க வேண்டுமென்று*
*துளைத்தெடுக்கிறாள் பெண்.*

*என்ன!*
*எப்பப் பாத்தாலும் இட்லி, தோசை*
*வேறு எதையாவது மாற்று!*
*வேகப்படுகிறார் அப்பா.*

*மொதல்ல*
*இந்தக் கரித்துணியை மாற்றணும்*
*அம்மாவும் முனகுகிறாள்*

*பலருக்கும் பயன்படாமல்*
*பழசாகி நைந்து போன*
*இந்தச் சமூக அமைப்பை மாற்றும்*
*பேச்சுக்கே இடமின்றி*
*குடும்பம் நடத்துவது மட்டும்*
*குமட்டலையோ உங்களுக்கு?*

● துரை. சண்முகம்

## எனது வார்த்தைகள்

*எனது வார்த்தைகளைக்*
*காற்று கையோடு*
*கொண்டுபோயிற்று.*

*எனது வார்த்தைகள்*
*மழையிலும் வெயிலிலும்*
*வதங்கிப் போயின.*

*எனது வார்த்தைகள்*
*தொண்டைக்குள்ளும்*
*சுவர்களுக்குள்ளும்*
*ஒட்டடை படிந்து பாழடைந்தன.*

*எனது வார்த்தைகள்*
*தக்க கவசங்களோடும்*
*ஒப்பனைகளோடும்*
*உலா வந்து விபத்துக்குள்ளாயின.*

*எனது வார்த்தைகள்*
*நிழலும் பிம்பமும் பார்க்காமலேயே*
*தலைசீவிக் கொண்டன.*

*எனது வார்த்தைகள்*
*கை தட்டல்களுக்காக,*
*பெருமிதத்திற்காக*
*ஏங்கி இளைத்தன.*

*எனது வார்த்தைகள்*
*இறந்து விழுவதையும்*
*அதற்குச் சவ அடக்கம் நிகழ்வதையும்*
*பார்த்துக் கொண்டிருந்தன*
*எனது வார்த்தைகள்.*

*செத்து விழுந்த*
*எனது வார்த்தைகளைத் தூக்கி*
*வீதியில் வீசினேன்.*

*கண்ணீர்*
*வியர்வை*
*இரத்தத்தில் ஊறி*
*தனக்குரிய வர்க்கத்தைத்*
*தேர்ந்து கொண்டதும்*

*எனது வார்த்தைகள்*
*உயிர் கொண்டன.*

*எனது வார்த்தைகள்*
*உதிரும்போது*
*வெப்பம் உண்டாயிற்று.*

*எனது வார்த்தைகள்*
*சவங்களை உயிர்ப்பித்தன.*

*அனேகமாய் அப்போது முதல்*
*''எனது வார்த்தைகள்''*
*''எனது'' வார்த்தைகளாய்*
*மட்டும் இல்லை.*

● தீபன்



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

2

● மருதையன்

"காந்தி பிறந்த மாநிலத்திலா இப்படி என்று அங்கலாய்ப்பவர்கள் காந்தியையும் புரிந்து கொள்ளவில்லை, குஜராத்தையும் புரிந்து கொள்ள வில்லை" என்று இக்கட்டுரையை ஏற்கெனவே முடித்திருந்தோம்.

காந்தி பிறந்த மாநிலம் மோடியின் காலடியில் கிடக்கிறது; அம்பேத்கர் பிறந்த மாநிலத்தில் பா.ஜ.க. - சிவசேனா ஆட்சியையே பிடித்திருக்கிறது. பெரியார் பிறந்த மண்ணில் திராவிடக் கட்சிகள் பாரதீய ஜனதாவுக்குப் பல்லக்கு சுமக்கின்றன.

இந்த நிலைமை குறித்து அதிர்ச்சி தெரிவிப்பது அல்லது அவநம்பிக்கை கொள்வதைக் காட்டிலும் இது எப்படிச் சாத்தியமானது என்பதை ஒரு பறவைப் பார்வையில் நாம் பார்ப்போம். எதிரிகளை முறியடிப்பதற்கும், துரோகிகளை முன் கூட்டியே அடையாளம் காண்பதற்கும், மண் குதிரைகள் மீது நம்பிக்கை வைக்காமல் இப்போதாவது விழித்துக் கொள்வதற்கும் இது நமக்குப் பயன்படும்.

***

இந்திய மக்கள் தொகையில் வெறும் 5 சதவீதத்தை மட்டுமே கொண்ட சிறிய மாநிலமான குஜராத்தில்தான் இந்தியத் தொழில்துறை மூலதனத்தில் 20 சதவீதம் போடப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாகவே தொழில் வளர்ச்சியில் நாட்டிலேயே முதல் மாநிலமாக இருந்து வரும் குஜராத், நாட்டின் தொழில்துறை உற்பத்தியில் ஏழில் ஒரு பங்கை அளிக்கிறது. நாட்டிலேயே மக்கள் தொகை நகர்மயமாகியிருப்பதும் குஜராத்தில்தான் அதிகம்.

இப்படித் தொழில்மயமாகியிருக்கும் ஒரு மாநிலம் பிற்போக்குத்தனமான பார்ப்பன இந்துமதவெறியின் செல்வாக்கிற்கு ஆட்பட்டது எப்படி என்று கேள்வி எழுப்பினால், அரசியல் சமூக பிற்போக்குத்தனம் உத்தரவாதம் செய்யப்பட்ட காரணத்தினால்தான் இந்தியத் தரகு முதலாளிகள் 'தைரியமாக' தங்கள் மூலதனத்தை அங்கே குவித்தார்கள் என்றும் அதற்குப் பதிலளிக்கலாம்.

கம்யூனிஸ்டு இயக்கமோ, சாதி எதிர்ப்பு சீர்திருத்த இயக்கங்களோ எதுவும் தோன்றி விடாமல் மிதவாத இந்து மதவாதமான காந்தியத்தைப் பேணி வளர்த்த இந்த மண்ணை, இந்து - இந்தி - இந்தியா எனும் கோட்பாட்டின் வர்க்க அடித்தளமாக அமைந்த பார்ப்பன, பனியா தரகு முதலாளிகளின் முக்கியப் பிறப்பிடமான இந்த மண்ணை, பாகிஸ்தானுடனான எல்லையைப் பெற்றிருப்பதால் பாக். எதிர்ப்பு இந்து தேசிய வெறியைத் தூண்டுவதற்கு மிகவும் வாட்டமான இந்த மண்ணை, இந்து - முசுலீம் மோதல்களின் 'வரலாற்றை'த் தூசி தட்டி எடுத்துக் கடை விரிக்க வாய்ப்பான இந்த மண்ணை - இந்துத்துவத்தின் சோதனைக் கூடமாக ஆர்.எஸ்.எஸ். தெரிவு செய்ததில் வியப்பில்லை.

### காந்தியத்தின் தோற்றம்

குஜராத்தின் இந்து, முசுலீம், ஜைன வணிக வர்க்கத்தினருக்குப் பல நூற்றாண்டுக் கால வரலாறு உண்டு. எனினும் கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து கீழ்க்கண்ட விசயங்களைக் குறிப்பிடுகிறார் சமூகவியல் ஆய்வாளர் அச்யுத் யாக்னிக்.

மிகக் கடுமையான உணவுப் பஞ்சமும் அதைத் தொடர்ந்து பரவிய பிளேக் நோயும்தான் குஜராத்திற்கு 20-ம் நூற்றாண்டின் துவக்கமாக அமைந்தன. பஞ்சத்தினால் கிராமப்புற விவசாயம் முற்றிலுமாகச் சீர்குலைந்த சூழ்நிலையில் நகரமயமாக்கமும் தொழில்மயமாக்கமும் தொடங்கின.

பார்ப்பன, பனியா, படேல் போன்ற இந்து மேல் சாதியினரும், போரா, கோஜா, மெமோன் போன்ற முசுலீம் வணிகச் சாதியினரும் வெளிநாடுகளுக்கு - குறிப்பாக ஆப்பிரிக்கா, பிஜி போன்ற இடங்களுக்கு - குடிபெயரத் துவங்கினர். இன்று வெளிநாட்டில் குடியேறிய குஜராத்திகள் எனும் பெரிய தொரு பிரிவினர் உருவாவதற்கு இது துவக்கமாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பரவிய நவீன தொழில்நுட்பக் கல்வியானது மருத்துவம், பொறியியல், வேளாண் அறிவியல், வங்கித் துறை ஆகியவற்றில் வல்லுநர்களை உருவாக்கியது. பெரும் நிலவுடைமையாளர்கள் தங்கள் கிராமப்புற நிலவுடைமையைத் தக்க வைத்தபடியே நகர்ப்புறத் தொழில்களிலும் மூலதனமிடத் தொடங்கினர். இரண்டு உலகங்களும் ஒன்றின் மீது ஒன்று செல்வாக்கு செலுத்தி தம்மை உறுதி செய்து கொண்டன.

இந்தத் தருணத்தில்தான் காந்தி அரசியல் அரங்கினுள் நுழைகிறார். வணிக வர்க்கமாக இருந்து அதிகாரவர்க்கமாக மாறிய குடும்பத்திலிருந்து வந்தவரான காந்தி சவுராட்டிர நிலவுடைமைச் சமூகத்தின் பண்பாட்டை அறிந்தவர். ஏற்கெனவே வைணவ பனியாக்களும் (காந்தியின் சாதி) ஜைனர்களும் மிகுந்திருந்த வணிக வர்க்கத்தினர் தமக்கிடையிலான போட்டிகளை சமரசத்தின் மூலம் தீர்த்துக் கொள்வதை ஒரு பண்பாடாக வைத்திருந்தனர். "மோதல் என்பதே புனிதமற்றது" என்றொரு முதுமொழியே இச்சாதியினரிடம் நிலவியது.

ஆனால் இந்த வணிக வர்க்கத்திலிருந்து தொழில் முனைவோர் எனும் வர்க்கம் தோன்றத் தொடங்கியவுடன், "ஒருவருக்கொருவர் இரக்கமற்ற போட்டி - முன்னேற்றம்" என்ற புதிய அணுகுமுறை வலுப்பெறத் தொடங்கியது. சமரசம் என்ற பழைய பண்பாடு காலாவதியாகி இரக்கமற்ற முதலாளித்துவப் போட்டி துவங்கியது.

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு காந்தி முன் வைத்த சமரசக் கோட்பாடு, முதலாளிகளுக்கிடையிலான முரண்பாட்டையும் மோதலையும் இல்லாமல் செய்துவிடவில்லை.

ஆனால் தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்துக்குமிடையிலான முரண்பாட்டை மழுங்கச் செய்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தை முழு அடிமையாக்குவதற்கும் பயன்பட்டது. பின்னர் இதுவே இந்திய விடுதலை இயக்கத்தை முனை மழுங்கச் செய்யும் அரசியல் சித்தாந்தமாக வளர்ச்சி அடைந்தது.

பனியா தரகுப் பெருமுதலாளிகளின் நலனுக்கு ஏற்ற வகையில் பிரிட்டிஷாருடன் சமரசம் - அகிம்சை வழிப் போராட்டம், முதலாளிகளுக்கெதிரான தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் அறங்காவலர் கொள்கை, நிலப்பிரபுக்களின் அடிமைகளாக விவசாயிகளை நீடிக்கச் செய்யும் ராம ராச்சியக் கோட்பாடு, நால்வருண



படிப்பகம்

www.padippakam.com



**கூரை கூட இல்லாத அகதி 'முகாம்'. இயல்பு நிலை திரும்பிவிட்டது என்று நிரூபிக்க தற்போது இங்கிருந்தும் துரத்தப்படுகிறார்கள் முசுலீம் மக்கள்.**

அமைப்புக்கு ஆதரவு - சாதி ஏற்றத்தாழ்வுக்கு 'எதிர்ப்பு', தீண்டாமை 'எதிர்ப்புப்' பிரச்சாரம் - ஆனால் தாழ்த்தப்பட்டோரை 'அரிசனங்களா'க்கும் சூழ்ச்சி, கிறித்தவ மதமாற்ற எதிர்ப்பு... என காந்தியம் என்று அழைக்கப்படும் கொள்கை எல்லா வகையிலும் இந்து தேசியத்தின் மிதவாத வடிவமாகவே இருந்தது.

ஒரு சித்தாந்தம் என்ற முறையில் காந்தியத்திற்கும் கோல்வால்கரிசத்திற்கும் உள்ள தொப்புள் கொடி உறவைப் பற்றி நாம் வேறுபல சந்தர்ப்பங்களில் எழுதியிருப்பதால் அது குறித்த விளக்கம் இங்கே தேவையில்லை. ஆனால் குஜராத்தில் காந்தியத்தின் சமூக அடித்தளமாக இருந்த வர்க்கங்கள் காதும் காதும் வைத்தாற்போல இந்துத்துவத்தின் அடித்தளமாக மாறியது எப்படி என்பதற்கு விளக்கம் வேண்டும்.

***

1947-க்குப் பிந்தைய இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியும், பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி போன்றவையும் சமூக அமைப்பில் பாரிய மாற்றங்களைத் தோற்றுவித்தன.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம் வேறு பல மாநிலங்களுடன் ஒப்பிடத்தக்கதுதான் என்றாலும், குஜராத்தின் அரசியல் அரங்கில் நிலவிய பிற்போக்குத்தனம்தான் இதில் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தை ஒப்பிட்டுக் கூறுவதெனில் 1947-க்குப் பிந்தைய 20 ஆண்டுகளில் கம்யூனிஸ்டு இயக்கமும், பார்ப்பன எதிர்ப்புத் திராவிட இயக்கமும் காங்கிரசுக்கு எதிராகத் தமிழகத்தில் அப்போது வளர்ந்து கொண்டிருந்தன. ஆனால் குஜராத்தில் கம்யூனிஸ்டு இயக்கங்களோ சாதி எதிர்ப்பு இயக்கங்களோ முளைவிடக் கூட முடியாமல் காந்தியம் கவனித்துக் கொண்டது. சாதி ஆதிக்கத்தையும், முதலாளிகளின் சுரண்டலையும் எதிர்த்து மிகவும் மென்மையான முறையில் யாரேனும் கருத்து தெரிவித்தால் கூட அவர்கள் "சிவப்புப் பேர்வழிகள்" என ஏளனம் செய்து ஒதுக்கப்பட்டனர் என்று கூறுகிறார்கள் குஜராத்தைச் சேர்ந்த சமூகவியலாளர்கள்.

**பொருளாதார வளர்ச்சி அரசியல் பிற்போக்குத்தனம்**

இந்நிலையில் காங்கிரசைக் காட்டிலும் பிற்போக்கான சுதந்திராக் கட்சிதான் குஜராத்தில் காங்கிரசுக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருந்தது. மன்னர் மானிய ஆதரவு, நிலச் சீர்திருத்த எதிர்ப்பு, பொதுத்துறை எதிர்ப்பு, தனியார்மய ஆதரவு, குலக்கல்வி ஆதரவு, அமெரிக்க ஆதரவு, வெறி கொண்ட கம்யூனிச எதிர்ப்பு ஆகியவற்றையே தமது கொள்கைகளாகக் கொண்டு ராஜாஜி தொடங்கிய சுதந்திராக் கட்சி இந்தியாவிலேயே குஜராத்தில்தான் குறிப்பிடத்தக்க செல்வாக்கு பெற்றிருந்தது.

ஆனால் சுதந்திராக் கட்சியின் பிரதானமான சமூக அடித்தளமாக விளங்கிய ராஜ்புத், கான்பி நிலவுடைமையாளர்கள் பொருளாதார ரீதியில் கிராமப்புற ஆதிக்க சக்திகளாகவும் சமூக ரீதியில் பின்தங்கியவர்களாகவும் இருந்தனர். ஆனால் படேல் என்ற மேல் சாதி விவசாய வர்க்கத்தினரும் பார்ப்பன பனியா சாதியினரும் நகர்மயமாகிறவர்களாகவும் வெளிநாடுகளுக்குக் குடி பெயர்பவர்களாகவும், வணிகத்தில் ஈடுபடுவர்களாகவும் வளர்ந்தனர்; பசுமைப் புரட்சியின் விளைவாக உருவாகி வளர்ந்த பணக்கார விவசாய வர்க்கத்திலும் கணிசமானோர் படேல் சாதியினர்தான்.

1970-களின் துவக்கம் வரை ஓட்டுச் சீட்டு அரசியலில் பார்ப்பன - பனியா - படேல் என்ற சாதிக் கூட்டணி காங்கிரசின் ஓட்டு வங்கியாகவும் சமூக அடித்தளமாகவும் இருந்தது. இதே பிரிவினர்தான் குஜராத்தில் ஜனசங்கம் துவங்கும்போது அக்கட்சியிலும் முன்நின்றனர். இன்றைய இனப்படுகொலையில் முக்கியப் பங்காற்றியவர்களும் இவர்கள்தான்.

ஆறாண்டு கால பாரதீய ஜனதா ஆட்சிதான் குஜராத்தை இந்துமதவெறியின் கொதிகலனாக மாற்றிவிட்டது என்று கூறுவது அவர்களுக்கு மிகையான 'கவுரவத்தை' வழங்குவதாகிவிடும். மேலும் அது இந்துமதவெறியைத் தூண்டுவதில் காங்கிரசின் 'பங்களிப்பை' மறுப்பதாகிவிடும்.

**காங்கிரசு துவக்கி வைத்த ரத யாத்திரை**

இன்று அயோத்தியை மையமாக வைத்து இந்து தேச வெறியைத் தூண்டி ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி தனது ரத யாத்திரையை குஜராத்திலுள்ள சோமநாதபுரத்திலிருந்துதான் தொடங்கினார். கஜனி முகமதுவின் படையெடுப்புக்கு ஆளான சோமநாதபுரம் விடுதலைப் போராட்ட காலத்திலேயே இசுலாமிய எதிர்ப்பு இந்து தேசியத்தின் சின்னமாகச் சித்தரிக்கப்பட்டது.

ஜூனாகாத் சமஸ்தானத்தின் அங்கமாக இருந்த சோமநாதபுரம் 1947 ஆகஸ்டு 15-ம் தேதி வரை இந்தியாவுடன் இணைக்கப்படவில்லை. அக்டோபர் 1947 இறுதியில் ஜூனாகாத் சமஸ்தானத்தின் நவாப் தானே முன்வந்து இணைந்ததன் விளைவாகத்தான் இந்தியா சோமநாதபுரத்தைப் பெற்றது.

இப்பேர்ப்பட்ட 'வீரம் செறிந்த' முறையில் சோமநாதபுரத்தைக் 'கைப்பற்றிய' இந்துமதவெறியர்களின் முன்னோ



படிப்பகம்

www.padippakam.com

டியான 'இரும்பு மனிதர்' படேல் கோயிலைப் புதுப்பித்துக் கட்டும் பணியில் ஈடுபடுமாறு பகிரங்கமாக அறைகூவல் விட்டு, இந்திய மதச்சார்பின்மையின் முகத்தில் காறி உமிழ்ந்தார். ''கோயிலைப் புதுப்பிக்க அரசாங்கம் உதவி செய்யட்டும்; ஆனால் செலவை மக்கள்தான் ஏற்க வேண்டும்'' என்று கூறி இதற்கு ஆசி வழங்கினார் காந்தி.

பிறகு, ''கோயில் கட்டினால் மட்டும் போதாது; அங்கே புதியதொரு சிவலிங்கத்தை நட்டு குடமுழுக்கும் செய்தால்தான் அது இந்துக்களின் உணர்வைக் கவுரவிப்பதாக இருக்கும்'' என்றார் படேல். அந்த விழாவில் அன்றைய குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத் (நேருவின் ஆட்சேபத்தை மீறி) கலந்து கொண்டார்.

எனவே, 1947-இல் சோமநாதபுரத்தில் காங்கிரசு தொடங்கி வைத்த இந்துமதவெறியின் ரதயாத்திரை அயோத்தியில் (அதாவது பாரதீய ஜனதாவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதில்) வந்து முடிந்திருக்கிறது எனலாம்.

மதச்சார்பின்மை என்ற போர்வையில் இந்து மதவாதத்தைத்தான் காங்கிரசு அரசு ஆதரித்தது என்பதற்கான சான்றுதான் சோமநாதபுரம். 'சுதந்திரம்' பெற்ற மறுகணமே கூச்சமின்றி இத்தகைய செயலில் காங்கிரசு ஈடுபட்டதற்கான காரணம் விடுதலைப் போராட்ட காலத்தில் அது முன்வைத்த மிதவாத இந்து தேசிய அரசியலில் பொதிந்திருக்கிறது.

அது மட்டுமல்ல; படேல், மொரார்ஜி, கே.எம். முன்ஷி, குல்ஜாரிலால் நந்தா, ராஜாஜி என ஒரு மிகப்பெரிய இந்து மதவாதக் கும்பல் காங்கிரசில் இருந்தபடியே ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியலை முன்தள்ளிக் கொண்டிருந்தது.

### அகதிகள் தோற்றுவித்த அடித்தளம்

இரண்டாவதாக, காங்கிரசின் இந்து தேசியமும், ஜின்னாவின் இசுலாமியத் தேசியமும், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியும் தோற்றுவித்த இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை, பிரிவினைக் காலக் கலவரங்கள் தோற்றுவித்த இசுலாமிய வெறுப்பு - ஆகியவை குஜராத்தின் இந்து உணர்வுடன் இரண்டறக் கலந்திருந்தன. குஜராத் பாகிஸ்தானின் எல்லையோரமிருப்பதால் வீடு வாசல் சொத்துக்கள் மற்றும் சொந்தங்களைப் பறிகொடுத்து பாகிஸ்தான் பகுதியிலிருந்து ஓடிவந்த இந்துக்கள் பலர் குஜராத்தில் குடியேறினர்.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அத்வானியைப் போன்ற அகதிகள் - குறிப்பாக வணிகர்கள் மற்றும் நடுத்தர



படுகொலைக்குப் பின் சென்ற மாதம் நடைபெற்ற ஜெகந்நாதர் யாத்திரை. 1969-இல் இந்த யாத்திரையை ஒட்டித் தூண்டப்பட்ட கலவரத்தில் 2000 பேர் கொல்லப்பட்டனர்.

வர்க்கத்தினர் - 'இயல்பாகவே' இந்துமத வெறியின் சமூக அடித்தளமாக மாறினர்; ஏராளமானோர் ஆர்.எஸ்.எஸ்-இல் இணைந்தனர்.

இவ்வாறு பாகிஸ்தான் பகுதியிலிருந்து குஜராத்தில் குடியேறிய அகதிகள், இங்கிருந்து விரட்டப்பட்ட முசுலீம்களின் வீடுகளையும் நிலங்களையும் கைப்பற்றிக் கொண்டனர்.

வீடு, நிலம், வர்த்தகம் போன்ற மதம் சாராத அன்றாடப் பிரச்சினைகளில் தோன்றும் முரண்பாடுகள் மத ரீதியான கலவரங்களாக மாறின அல்லது இவ்வாறு மாற்றும் சதியை காங்கிரசு மற்றும் சுதந்திராக் கட்சிகளின் மறைமுக ஆதரவுடன் ஆர்.எஸ்.எஸ். ஆங்காங்கே அரங்கேற்றி வந்தது. குஜராத்தில் இந்து மதவெறி வளர்ந்ததற்கான வரலாற்று ரீதியான காரணங்களில் இவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இருப்பினும் 1947-க்குப் பிந்தைய இருபது ஆண்டுகளில், குறிப்பாக அனைத்திந்திய அளவில் காங்கிரசு செல்வாக்கிழந்து பிளவுபடும் வரை ஆர்.எஸ்.எஸ்.ஸும் அதன் கட்சியாகிய ஜனசங்கமும் குஜராத் உள்ளிட்டு எங்கும் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக வளர இயலவில்லை. வடமாநிலங்களில் மட்டுமே இருந்த ஜனசங்கம் அங்கேயும் பார்ப்பன, பனியா மற்றும் மன்னர்களின் கட்சியாகவே இருந்தது.

மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும் வேகமாக குஜராத்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி இந்த இருபது ஆண்டுகளில் நகரமயமாக்கத்தைத் துரிதப்படுத்தியது. பிற மாநிலங்களிலிருந்து பிழைப்பு தேடி நகர்ப்புறச் சேரிகளில் குடியேறிய இந்து - முசுலீம் ஏழைகளிடையே இயல்பான நல்லிணக்கம் நிலவிவந்த அதே நேரத்தில் பகைமைக்கான அடிப்படைகளும் தோன்றிய வண்ணமிருந்தன. குறிப்பாக, காந்தி பிறந்த மாநிலமென்பதற்காக அமல்படுத்தப்பட்ட மது விலக்குக் கொள்கை காரணமாக நகரங்களில் செழித்து வளர்ந்தன கள்ளச் சாராயக் கும்பல்கள். இவை இந்து - முசுலீம் கிரிமினல் கும்பல்களாகப் பிரிந்து அரசியல் பின்புலத்துடன் மோதிக் கொண்டன என்பது குஜராத் மற்றும் மகாராட்டிர மாநிலங்களிலுள்ள பெரு நகரங்களில் நடந்தது. முசுலீம் எதிர்ப்புணர்வுகளையெல்லாம் திரட்டி ஒருமுகப்படுத்தியது 1965-இல் குஜராத் எல்லையில் நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் போர்.

### ராஜாஜியின் கட்சி தூண்டிய சாதிவெறி

1960-களின் பிற்பகுதியில் உணவுப் பஞ்சம், விலைவாசியேற்றம் ஆகியவற்றால் நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தது. பசுமைப் புரட்சியின் விளைவாகப் பணக்கார விவசாயிகள் என்றொரு புதிய வலிமையான வர்க்கம் உருவாகி வந்த அதேநேரத்தில் சிறுவிவசாயிகளை பசுமைப்புரட்சி திவாலாக்கியிருந்தது.

தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம், தி.மு.க.வின் வளர்ச்சி, கேரளத்தில் கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சி, பிற இடங்களில் மாநிலக் கட்சிகளின் வளர்ச்சி, அனைத்துக்கும் மேலாக ஆளும் வர்க்கத்தை உலுக்கிய நக்சல்பாரிப் பேரெழுச்சி ஆகியவற்றால் நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தபோது குஜராத் அமைதிப் பூங்காவாக இருந்தது.

மாநிலம் அமைதியாக இருந்த போதிலும் குஜராத் காங்கிரசு கட்சி கோஷ்டிப் பூசலில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. எதிர்க்கட்சியான சுதந்திராக் கட்சியோ வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. மத்திய குஜராத்தின் நிலப்பிரபுக்கள், பசுமைப் புரட்



படிப்பகம்

www.padippakam.com

சியின் பிள்ளைகளான பணக்கார விவசாயிகள், சவுராட்டிரா பிராந்தியத்தைச் சேர்ந்த குறுநில மன்னர்கள், சாதிவெறி கொண்ட அதிகார வர்க்கத்தினர் மற்றும் முதலாளிகள் போன்றோர் சுதந்திராக் கட்சியின்பின் திரண்டு கொண்டிருந்தனர். இடைநிலைச் சாதிகளைச் சேர்ந்த 'இந்துக்கள்' அனைவரையும் 'சத்திரியர்கள்' என்று உருவேற்றி விட்டு இந்த மன்னர்கள் மற்றும் நிலப்பிரபுக்களின் தலைமையில் அணிதிரட்டியது மூதறிஞர் ராஜாஜியின் சுதந்திராக் கட்சி.

பார்ப்பன, பனியா, படேல் சாதியினரின் ஓட்டு வங்கியைச் சார்ந்திருந்த காங்கிரசோ, இந்தச் சாதிவெறிக் கூட்டணிக்கெதிராக இந்து மதவெறியைத் தூண்டத் தொடங்கியது. 1965-இல் நடந்த இந்தியா - பாகிஸ்தான் போர் இந்த மதவெறிப் பிரச்சாரத்தின் பின்புலமாக அமைந்தது.

1967 தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளும், பிராந்தியக் கட்சிகளும் பல மாநிலங்களில் காங்கிரசைத் தோற்கடித்தன. குஜராத்தில் காங்கிரசு மயிரிழையில் உயிர் தப்பியது. எனினும் காங்கிரசு இழந்த தொகுதிகளை அதனைக் காட்டிலும் பிற்போக்கான சுதந்திராக் கட்சிதான் கைப்பற்றியது என்பது அம்மாநிலத்தின் அரசியல் பிற்போக்குத் தனத்திற்கு ஒரு சான்று.

எனினும், காங்கிரசு ஆட்சியின் மீது மக்கள் கொண்டிருந்த அதிருப்தியை குஜராத்திலும் சரி, வட இந்தியாவின் பிற மாநிலங்களிலும் சரி ஜனசங்கத்தால் பெரிய அளவு அறுவடை செய்ய இயலவில்லை.

**நாடெங்கும் போராட்டம்**
**குஜராத்தில் மதக் கலவரம்**

நக்சல்பாரி எழுச்சி நாடெங்கிலும் விவசாயிகள் மத்தியில் தோற்றுவித்த நம்பிக்கை, இளைஞர்களிடம் உருவாக்கிய எழுச்சி, விலைவாசி உயர்வுக்கு எதிரான நாடு தழுவிய போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் ஆகியவை பெருகி வந்த இந்தச் சூழலில் மக்களைத் திசை திருப்புவதற்கும் தனக்கென ஒரு புதிய ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்கும் முயன்றார் இந்திரா காந்தி.

1969 ஜூலை 16-ம் தேதியன்று நிதியமைச்சர் பதவியிலிருந்து மொரார்ஜியை நீக்கினார் இந்திரா. ஜூலை 19-ம் தேதியன்று வங்கிகளை அரசுடைமையாக்கும் அவசரச் சட்டம் வந்தது. செப்டம்பரில் மன்னர் மானிய ஒழிப்பு அறிவிக்கப்பட்டது. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், நிலச்சீர்திருத்தச் சட்டம், விவசாயக் கூலிகளுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்... என 'முற்போக்கு' கவர்ச்சிவாத அறிவிப்புகள் தொடர்ந்தன.

இந்த 'முற்போக்கு' கவர்ச்சிவாத அரசியலை எதிர்கொள்ளும் திறன் சுதந்திராக் கட்சிக்கோ, சிண்டிகேட்டுக்கோ இல்லை. 'சோசலிச' அபாயத்தைக் கண்டு இந்த அமெரிக்க ஆதரவுக் கும்பல்களால் கூக்குரல் மட்டுமே எழுப்ப முடிந்தது.

ஆனால் 'நம்பகமான வலதுசாரி சக்தி' என்று சி.ஐ.ஏ.வின் பாராட்டைப் பெற்ற ஆர்.எஸ்.எஸ். முசுலீம் எதிர்ப்புக் கலவரத்தைத் தூண்டுவதன் மூலம் இந்தச் சூழலை அரசியல் ரீதியாக எதிர்கொண்டது. 'சுதந்திரத்திற்கு'ப் பின் நாட்டின் மிகப் பெரிய முசுலீம் எதிர்ப்புக் கலவரம் 1969 செப், அக்டோபரில் அகமதாபாத்தில் தூண்டப்பட்டது.

ஜகந்நாதர் கோயிலையும் இந்துச் சாமியார்களையும் முசுலீம்கள் தாக்குவதாகவும், பசுக்களை வெட்டிக் கொல்வதாகவும் பரப்பப்பட்ட வதந்தியைத் தொடர்ந்து கலவரம் தொடங்கியது. அகமதாபாத்திலிருந்து பரோடா, நாடியாட், ஆனந்த் எனப் பல நகரங்களுக்கும் பரவிய கலவரம் சுமார் 2000 உயிர்களைக் காவு கொண்டது. 35,000 பேர் அகதிகளாயினர். காந்தி நிறுவிய அரிசன ஆசிரமத்தையும் இக்கலவரத்தின்போது இந்து வெறியர்கள் தாக்கினர் என்பது நினைவு கூறத்தக்கது.

> *தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம், தி.மு.க.வின் வளர்ச்சி, கேரளத்தில் கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சி, பிற இடங்களில் மாநிலக் கட்சிகளின் வளர்ச்சி, அனைத்துக்கும் மேலாக ஆளும் வர்க்கத்தை உலுக்கிய நக்சல்பாரிப் பேரெழுச்சி ஆகியவற்றால் நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தபோது குஜராத் அமைதிப் பூங்காவாக இருந்தது.*

**கலவரங்கள்**
**அதிகரித்தது ஏன்?**

அகமதாபாத் கலவரத்திற்குப் பின் வடமாநிலங்களில் பரவலாக ஒரு முசுலீம் எதிர்ப்பு / வெறுப்புணர்வைப் பரப்புவதில் ஜனசங்கம் வெற்றி கண்டிருந்தது. இந்திராவின் அரசுடைமையாக்கும் கொள்கைகளை எதிர்த்த தரகு முதலாளிகள், தங்களது பத்திரிகைகள் மூலம் இந்தக் கருத்தை உருவாக்கத் துணை நின்றனர்.

அகமதாபாத் படுகொலை தோற்றுவித்த மரண ஓலம் அடங்குமுன்பே, ஜனசங்கத்தின் ராஞ்சி மாநாடு இந்துக் கலாச்சாரத்தையும், இந்துக் கடவுள்களையும் மதிப்பதற்கு முசுலீம்கள் பழகிக் கொள்ள வேண்டுமென 'வேண்டுகோள்' விடுத்தது.

(தற்போது குஜராத் படுகொலையின் போது பெங்களூர் ஆர்.எஸ்.எஸ். மாநாடு முசுலீம்களுக்கு விடுத்த 'வேண்டுகோளை' வாசகர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

1954 முதல் 1966 வரையிலான காலகட்டத்தில், அதாவது தொழில் துறைகள் உருவாக்கப்பட்டு ஒப்பீட்டளவிலான பொருளாதார முன்னேற்றம் நிலவிய இந்தக் காலகட்டத்தில் ஒரு ஆண்டுக்குச் சராசரியாக 70 இந்து - முசுலீம் மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

ஆனால் கடுமையான பொருளாதார நெருக்கடியும் மக்கள் போராட்டங்களுமாக இருந்த 1967-70 காலகட்டத்தில் கலவரங்களின் எண்ணிக்கை உயரத் தொடங்கியது. 1967-209; 1968-346; 1969-519; 1970-521. மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவும், மோதவிடவும் வர்க்கப் போராட்ட அரசியலிலிருந்து திசை திருப்பவும் உருவாக்கப்பட்ட ஒரு நிரந்தரமான நிறுவனமாகவே இந்தியாவில் கலவரங்கள் செயல்படுகின்றன; செயல்பட்டிருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் கலவரங்களின் எண்ணிக்கை அதிகரித்ததை வைத்து இதனை ஆர்.எஸ்.எஸ்.-இன் அமைப்பு ரீதியான வளர்ச்சி என்று எளிமையாக மதிப்பிட்டு விடக்கூடாது.

''பணக்காரன் கட்சி என்ற முத்திரை குத்தப்பட்டு விடுவோம்'' என்று அஞ்சிய வாஜ்பாயி, சாதாரணக் குடிமகனின் நலனில் அக்கறை செலுத்தும் கட்சியாக ஜனசங்கத்தைச் சித்தரிக்க முயன்றார். 1969-இல் பாட்னாவில் நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசினார் வாஜ்பாய். ''மக்கள் சித்தாந்தங்களால் கவரப்படுவதில்லை; அவர்களுக்குத் தேவைப்படுவது ரொட்டி.''

**ஜனசங்கத்தின் வறுமைக்கெதிரான தேசியப் போர்!**

பாகிஸ்தான் எதிர்ப்பு தேசவெறியைத் தூண்டி 1971 போரில் வெற்றி பெற்று பாகிஸ்தானை உடைத்தும் காட்டிய இந்திராவை எதிர்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளவியலாமல் தடுமாறியது ஆர்.எஸ்.எஸ்.

இத்தகைய சூழ்நிலையில் அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தலில் ஜனசங்கம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையின் தலைப்பு ''வறுமைக்கெதிரான ஒரு தேசியப் போர்''. இந்தப் போரில் ஜனசங்கத்தின் வேட்பாளர்களில் 5 பேர் முன்னாள் மன்னர்கள்! எனினும் இந்தப் போரில் ஜனசங்கம் ஏற்கெனவே பெற்றிருந்த 35 எம்.பி. பதவிகளில் பதின்மூன்றைப் பறிகொடுத்து 22 தொகுதிகளில் மட்டுமே வென்றது.

இந்த 'இந்திரா அலை' குஜராத் சட்டமன்றத்தின் 168 இடங்களில் 139-ஐ வென்றது. ஜனசங்கம் வெறும் 3 இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. பெரும் வெற்றி பெற்றிருந்த போதும், காங்கிரசின் வெற்றி என்பது முரண்பட்ட கோஷ்டிகளின் வெற்றியாகவே இருந்தது.

இந்தக் கோஷ்டிகளில் யாரொருவரையும் முதல்வராக்க முடியாமல், இந்திராவின் விசுவாசி என்ற ஒரு தகுதியை மட்டுமே கொண்ட கன்ஷ்யாம் ஓஜா என்பவரை முதல்வராக்கியது காங்கிரசு மேலிடம். அறுதிப் பெரும்பான்மை அளித்த அசட்டு தைரியத்தில் இந்திராவின் வறுமை ஒழிப்புச் சவடால்களை சரம்சரமான சட்டங்களாக அறிவித்தது ஓஜா அரசு.

**குஜராத் நவநிர்மாண் இயக்கம் - பின்னணி**

படாடோபமான இந்த அறிவிப்புகள் எப்போது நடைமுறைக்கு வருமென்று ஏழைகள் காத்திருந்தார்கள். பணக்காரர்களோ உடனே களத்தில் இறங்கிவிட்டார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தை எதிர்த்துப் பணக்கார விவசாயிகளும், நிலப்பிரபுக்களும் கலகம் செய்யத் தொடங்கியவுடனே உச்சவரம்பை 16-இலிருந்து 45 ஏக்கராக உயர்த்தினார் ஓஜா.

ஏற்கெனவே பஞ்சத்தில் தவித்துக் கொண்டிருந்த குஜராத்தில் உணவுத் தட்டுப்பாடு மேலும் அதிகரித்தது.

மார்ச்'72 இல் பதவியேற்ற காங்கிரசு ஆறே மாதங்களில் செல்வாக்கிழந்து தடுமாறத் தொடங்கியது; அக்டோபரில் இரண்டு தொகுதிகளுக்கு நடந்த இடைத் தேர்தலில் தோற்றது. கடலை மற்றும் தானியங்களை வெளிச் சந்தையில் விற்று லாபம் ஈட்டி வந்த நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும், தரகர்களும் 50,000 பேர் கொண்ட பேரணி ஒன்றை பரோடாவிலிருந்து அகமதாபாத் வரை நடத்தினர். அரசுக் கொள்முதலை ரத்து செய்யக் கோரினர். காங்கிரசின் பல்வேறு கோஷ்டித் தலைவர்களும் முன்னாள் சுதந்திராக் கட்சி சிண்டிகேட் கட்சிப் பிரமுகர்களுமே இப்போராட்டங்களை மறைமுகமாகத் தூண்டிவிட்டனர்.

தொடர்ச்சியான அடிமைத்தனத்தினாலும் காந்தியத்தின் செல்வாக்கினாலும் கோழைகளாக்கப்பட்டிருந்த உழைக்கும் வர்க்கம் கையறு நிலையில் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. சலுகைகளை அனுபவித்து வந்த 'உயர்' சாதி உடைமை வர்க்கமோ அதில் ஒரு கடுகளவைக் கூட விட்டுத்தர முடியாது என்று களத்தில் நின்று கொண்டிருந்தது.

கூலி ஏழை விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்கள் பணக்கார விவசாயிகளுக்கும் இடையிலான வர்க்க முரண்பாடு காங்கிரசு கட்சியின் கோஷ்டி மோதலாகச் சீரழிந்து கொண்டிருந்தது. கன்ஷ்யாம் ஓஜாவிற்குப் பதிலாக 70 கல்லூரிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த 'கல்வி வள்ளல்' சிமன்பாய் படேல் முதல்வராக்கப்பட்டார்.

> *சித்தாந்த ரீதியாக குஜராத்தின் கதவுகளை இந்துமதவெறிக்குத் திறந்து விட்டது காந்தியம். காங்கிரசோ அமைப்பு ரீதியாக ஆர்.எஸ்.எஸ். தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வசதியாக, இது நாள்வரை தனது கட்சியின் சமூக அடித்தளமாக இருந்து வந்த வர்க்கங்களையும் சாதிகளையும் ஆர்.எஸ்.எஸ்.-இன் கையில் ஒப்படைத்தது.*

மிகவும் கொந்தளிப்பான இந்தச் சூழலில் சிமன்பாய் படேலுக்கு எதிரான மாணவர் போராட்டமும் தொடங்கி வெகு வேகமாகப் பரவத் தொடங்கியது. மாணவர்கள் மீதான அடக்குமுறை, போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது.

உணவுப் பஞ்சத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களின் வெறுப்பு, தானியத்தைப் பதுக்குவதற்கும் கொள்ளை லாபமடிப்பதற்கும் இடையூறாக இருந்த அரசுக் கொள்முதலுக்கு எதிரான பணக்கார விவசாயிகள் மற்றும் வர்த்தகச் சூதாடிகளின் போராட்டம், கல்வி வியாபாரிகளின் தலைவனான சிமன்பாய் படேலுக்கு எதிராக மாணவர்களும் ஆசிரியர்களும் நடத்திய போராட்டம், சிமன்பாய் படேலிடம் தோற்றுப் போன காங்கிரசின் எதிர்கோஷ்டியினர் நடத்திய உட்கட்சிக் கலகம் - ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற, ஒன்றுக்கொன்று எதிரான இந்த மோதல்கள் நிர்ப்பந்தித்து மாநில அரசைக் கலைக்கும் நிலைக்கு மைய அரசைத் தள்ளின.

இலக்கில்லாத இந்தக் குழப்பம் நவநிர்மாண் இயக்கம் என அழைக்கப்பட்டது. இதுதான் உண்மையான இளைஞர்களின் எழுச்சியென்றும், குஜராத்தைத் துவக்கப் புள்ளியாக வைத்து நாடெங்கும் இந்திராவுக்கு எதிரான போராட்டத்தை விரிவுபடுத்தப் போவதாகவும் அறிவித்தார் ஜெயபிரகாஷ் நாராயண்.

உண்மையில் நவநிர்மாண் இயக்கம் புதிதாக எதையும் நிறுவவில்லை. மாறாக, தேர்தல் தோல்வியால் துவண்டு, இந்திராவின் கவர்ச்சிவாத அரசியலை எதிர்கொள்ளவியலாமல் சுருண்டு கிடந்த ஜனசங்கத்தை அது உயிர்ப்பித்தது. நில உச்சவரம்பு, தானியக் கொள்முதல் போன்ற சட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க விரும்பினாலும் மக்களிடம் தனிமைப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தால் முடங்கியிருந்த ஜனசங்கம், தனது சமூக அடித்தளமான நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், வர்த்தகச் சூதாடிகள் ஆகியோர் தாமே நேரில் களத்தில் இறங்கியவுடன் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. மாணவர் போராட்டத்திலும் ஊடுருவி 'மேல்' சாதி மாணவர்கள் மத்தியில் தனது வலைப் பின்னலை விரிவுபடுத்திக் கொண்டது.

விலைவாசி உயர்வு, ஊழல் ஆகியவற்றை எதிர்ப்பதாகப் பொதுவாகக் கூறிக் கொண்ட போதும், ஜனநாயக சக்திகள் சிலரையும் இது ஈர்த்திருந்த போதும், சாராம்சத்தில் 'உயர்' சாதி உடைமை வர்க்கத்தினர் போராட்டமாகவும், காங்கிரசின் உட்கட்சிக் கோஷ்டிப் பூசலின் தெருச்சண்டை வடிவமுமாகவே இது இருந்தது.

சித்தாந்த ரீதியாக குஜராத்தின் கதவுகளை இந்துமதவெறிக்குத் திறந்துவிட்டது காந்தியம். காங்கிரசோ அமைப்பு ரீதியாக ஆர்.எஸ்.எஸ். தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வசதியாக, இதுநாள் வரை தனது கட்சியின் சமூக அடித்தளமாக இருந்து வந்த வர்க்கங்களையும் சாதிகளையும் ஆர்.எஸ்.எஸ்.-இன் கையில் ஒப்படைத்தது.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# கேட்டீரா சேதி!

## மோடி ஓர் அகிம்சைப் பல்கலைக்கழகம்

**கு**ஜராத்தில் ஓர் அகிம்சைப் பல்கலைக்கழகம் பிறக்கப் போகிறது! அறிவித்தவர் இனப்படுகொலை நாயகன் மோடி. வன்முறைக்கு எதிராகவும் ஒழுக்க நெறிகளுக்காகவும் கருத்துப் பிரச்சாரம் செய்ய பல மாநிலங்களுக்கும் 'அகிம்சைப் பயணம்' சென்று கொண்டிருக்கும் ஜைன மத ஆசாரியார் மகாபிரக்ஞாவின் முன்னிலையில் அகமதாபாத்தில் இதை அறிவித்துள்ளார் மோடி. இதன் நோக்கம் - அமைதி வழியின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்வது. வன்முறையின் எல்லா அம்சங்களையும் பல காலம் பயின்ற மோடி குஜராத்தில் அவற்றை நடைமுறைப்படுத்தி விட்டு ரத்தக் கவிச்சி வீசும் வாயால் அகிம்சைப் பல்கலைக்கழகம் அமைக்க அழைப்பு கொடுக்கிறார்.

பல லட்சம் சமணர்கள் கழுவிலேற்றப் பட்ட போது ஜைன (சமண) மதமும், 'இந்து மதமு'ம் பரம எதிரிகள். இன்றோ சமண மதம் சார்ந்த வணிகர்கள் - வட்டிக் கடை முதல் பெரிய கம்பெனிகள் வரை சொந்தமாக வைத்திருப்பவர்கள் 'இந்து' பனியாக்களுடன் கூட்டு சேர்ந்திருக்கிறார்கள் கொள்ளைக்காக. இந்த வர்க்க பாசத்தின் விளைவே மோடியின் அறிவிப்புக்கு ஜைன ஆசாரியார் தலையாட்டியிருப்பது. ஜைன முனிவர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? ஈ, எறும்புக்குக் கூடத் தீங்கு நேரக்கூடாதென்று வாயில் வெள்ளைத் துணியும் கையில் துடைப்பமுமாக நடப்பவர்கள் அவர்கள்!

***

## இந்து என்னடா, முசுலீம் என்னடா?

**அ**கமதாபாத் சரய்பூர் முகாமில் (எண்: 45) 800 அகதிகள் இருக்கிறார்கள். அதில் 24 'இந்து'க் குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் மற்ற முசுலீம்களுடன் சேர்ந்தே வாழுகிறார்கள்; இவர்கள் சலாத் பழங்குடிகள். 120 பேரும் 'அம்பிகா மில்' பகுதியில் முசுலீம்களோடு வாழ்ந்தவர்கள்; மார்ச் 1 அன்று சங் பரிவார் வெறியர்கள் முசுலீம்களைத் தாக்க வந்தபோது கையில் வில், அம்பு எடுத்து எதிர்த்து நின்று சண்டை போட்டார்கள். வெறியர்களின் கூட்டம் பெருகப் பெருக, எதிர்த்து நிற்க முடியாமல் எல்லோருமாகச் சேர்ந்து முகாமுக்கு வந்துவிட்டார்கள்; கிடைத்ததைச் சாப்பிட்டு ஒன்றுபட்டு இருந்தார்கள்.

இந்து வெறியர்களுக்கு இச்செய்தி எட்டியது; முகாம் 45-ஐ மூடச் சொல்லி அரசு உத்தரவு பிறப்பித்து விட்டது. சோறு நிறுத்தப்பட்டது; எப்படியும் சோறு ஆக்கலாம் என்று துணிந்தவர்களுக்கு அடுத்த அடியும் விழுந்தது; தண்ணீர் நிறுத்தப்பட்டது. ''எங்களுக்கு நிவாரணப் பணமும், பாதுகாப்பும் கிடைக்கும் வரை சோறு, தண்ணீர் இல்லாமலும் கிடப்போம்'' என்கிறார்கள் அவர்கள்.

'இந்து' முசுலீம் ஒத்துழைப்பு என்பது லட்சியவாதத்துக்காக வெறுமனே பேசுவது அல்ல; நேருக்கு நேர் இந்து வெறியர்கள் மோதும்போது முசுலீம்களைப் பாதுகாக்க சண்டை போட்டார்களே - அதுவே முன்மாதிரியான, நாம் வரிக்க வேண்டிய போராட்டம்!

***

**துப்புரவுப் பணியாளர்களைக் கேவலமாகப் பேசிய பால்தாக்கரேவை எதிர்த்து தீண்டாமை வன்கொடுமை வழக்கு போடுவார்களா?**



## உழைப்பென்றால் என்னவென்று...

**சி**வசேனைத் தலைவன் பால்தாக்கரேவின் வாய்க்கொழுப்பைத் தட்டிக் கேட்டவர்கள் குறைவு. இம்முறை வசமாகச் சிக்கிவிட்டான்.

அண்மையில் மகாராட்டிர அரசு அனைத்துக் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு மாக காமன் வெல்த் பாராளுமன்றச் சங்கம் சார்பில் சனநாயக மதிப்பீடுகளைப்பற்றி கற்றுக் கொள்வதற்கான(?) அயல்நாட்டுச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தது. ''எதற்காக அவர்கள் வெளிநாடு செல்ல வேண்டும்? அங்கே தேவையான அளவு பங்கிகள் (துப்புரவுப் பணியாளர்கள்) இல்லையா? உங்களை அங்கே கூப்பிட்டார்களா?'' என்று கேலி செய்தான் தாக்கரே.

சாதியைச் சொல்லிப் பழித்தவனைச் சும்மா விடக்கூடாது என்று துப்புரவுப் பணியாளர்கள் தீண்டாமைக் குற்ற வழக்கு போடப் போவதாக அறிவித்தார்கள். காங்கிரசு முதலமைச்சர் பிரச்சினையை நானே கவனிக்கிறேன் என்று நடுவில் புகுந்தார். குலை நடுங்கிப் போன பால்தாக்கரே தன் பத்திரிகை மூலம் மன்னிப்பு கேட்டான். ''யாரையும் புண்படுத்த நான் அப்படிச் சொல்லவில்லை. பங்கிகளின் மகத்தான சேவைக்கு நான் என்றுமே நன்றி பாராட்டுபவன்'' என்று அறிக்கை விட்டான். உழைப்பு என்றால் என்னவென்றே தெரியாத பாசிஸ்டு தாக்கரே உழைப்பவர்களின் 'சேவை'யைப் பாராட்டுகிறானாம்.

பாசிஸ்டுகளை அவர்கள் மாட்டிக் கொள்ளும் இடத்திலேயே தொடப்பக்கட்டையாலே சாத்தி அம்பலப்படுத்தித் தட்டிக் கேட்க ஆளில்லாத இடத்தில்தான் பாசிஸ்டுகள் சண்டப் பிரசண்டர்கள்.

***

## ர.சு. நல்ல பெருமாள்: இட்லரின் ரசிகர்

**ர**.சு. நல்ல பெருமாள் ஒரு தமிழ் நாவலாசிரியர். இவரது பேட்டி *குமுதம் ஜங்ஷனில்* வெளியாகியுள்ளது (ஜூலை 16-31, 2002). ''அவர் 'கல்லுக்குள் ஈரம்' என்று ஒரு



படிப்பகம்

www.padippakam.com

நாவல் எழுதினார். பிரபாகரன் என்ற சாதாரண இளைஞரை அதுதான் ஒரு புரட்சிக்காரராக்கியது; விடுதலைப் புலியாக்கியது... பிறகு 'போராட்டங்கள்' என்று ஒரு நாவல் எழுதினார். தமிழக கம்யூனிஸ்டுகளைக் குமுறி எழுந்து குரல் கொடுக்கச் செய்தது...'' என்ற முன்னுரையோடு அவரது பேட்டி வெளியாகியிருக்கிறது.

அதிலிருந்து ஒரு பகுதி:

''**கே:** உங்களது பல நாவல்களில் கம்யூனிசத்திற்கு எதிரான குரல் ஓங்கி ஒலிக்கிறது. இதற்குப் பிரத்தியேகக் காரணம் உண்டா?

**ப:** கம்யூனிசம் எனக்குப் பிடிக்காது. அதுதான் முக்கியக் காரணம்... ஒவ்வொரு மனுஷனும் பிறவியிலேயே வித்தியாசமான குணாம்சங்களோட பிறக்கிறான். அவனவன் திறமைக்குத் தகுந்தபடி தனது வாழ்வை உயர்த்தப் பாடுபடுவான். அதுவே இயற்கையின் நியதி. இது நிலைத்திருக்கும்வரை கம்யூனிசத்தை மக்களிடம் யாரும் வலிந்து புகுத்தி விடமுடியாது.

**கே:** உங்களுக்கு கம்யூனிசம் மீது இத்தகைய வெறுப்பு ஏற்படக் காரணம் என்ன?

**ப:** எனது பள்ளிப் பருவத்தில் நான் ஹிட்லரின் 'மெயின் கேம்ப்' படித்தேன். அதைப் படித்ததன் தாக்கமாகவே எனக்குக் கம்யூனிச எதிர்ப்பு ஏற்பட்டது. ஜெர்மனிய மக்கள் உலகிலேயே முதன்மையானவர்களாக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக ஆகவேண்டும் என்பதற்காக ஹிட்லர் பாடுபட்டார். அதற்காக அவர் நடத்திய யுத்தங்கள் தவறானதே தவிர, தனிப்பட்ட விதத்தில் ஹிட்லர் மீது எந்தத் தவறும் சொல்ல முடியாது.''

ர.சு. நல்லபெருமாளின் பார்வைக்குத் தனிவிளக்கம் வேண்டாம். ''கம்யூனிசம் எனக்குப் பிடிக்காது - ஏனென்றால் பாசிசம் தான் எனக்குப் பிடிக்கும்'' என்பதைப் பச்சையாகச் சொல்லி விட்டார். ஆனால் கம்யூனிசத்தின் மீது வன்மத்தையும் வெறுப்பையும் வைத்துக் கொண்டே, கம்யூனிசம் - பாசிசம் இரண்டுக்கும் நடுவே ஏதோ ஒரு 'சுதந்திரப் பிராந்தியம்' இருப்பது போல பாவ்லா காட்டும் 'பெருமான்களை' அடையாளம் காண்பதுதான் கொஞ்சம் சிரமம்.

***

## சூடு - சொரணை வேண்டாமா?

**பா**கிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் ஒரு சம்பவம். ஒரு பெண்ணின் (வயது 18) தம்பி பணக்காரப் பெண் ஒருத்தியுடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சொல்லி விசாரிக்கப்பட்டான். ஜிர்கா என்றழைக்கப்படும் இசுலாமிய மவுல்விப் பெரியவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து அவனை விசாரித்தது; அவனுக்குத் தண்டனை கொடுக்க அவனுக்குப் பதிலியாக அவன் அக்காவை பணக்காரப் பெண்ணின் உறவினர்கள் கூட்டாகச் சேர்ந்து கற்பழிப்பது என்று முடிவெடுத்தது; ஜூன் 22 அன்று அந்தக் குற்றமற்ற பெண் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டாள். இதற்கு அவர்கள் வைத்த பெயர் 'கௌரவக் கற்பழிப்பு'.



**சங்கீதாவின் 'கற்பை'ச் சோதித்தறியும் ஆண் பூசாரி சூட்டுக் கம்பியை கையால் தொடாமல் கிடுக்கியால் பிடித்திருக்கிறார்!**

இதைப் படித்தால், 'சரியான காட்டுமிராண்டிங்க' என்று பாகிஸ்தானை வெறுப்பவர்கள் சொல்வார்கள். இந்தியாவில் மத்தியப் பிரதேசத் தலைநகரான இந்தூரில் ஜூலை 6-ஆம் நாள் நடந்ததைக் கேட்டால் என்ன சொல்வார்கள்? கஞ்சார் என்ற பழங்குடிச் சமூகத்தில் சங்கீதா சாவ்டா என்ற 26 வயது இளம் பெண்ணுக்கு ஒரு தண்டனை கொடுக்கப்பட்டது. தண்டனையைத் தீர்மானித்தவர்கள் கஞ்சார் பஞ்சாயத்தார்.

பம்பாயில் உள்ள குடும்ப நண்பர் வீட்டுக்குச் சென்ற சங்கீதா கணவனுக்குத் தெரிவிக்காமல் விஷ்ணுதேவி கோயிலுக்குப் பயணம் சென்று வந்தாராம். சங்கீதாவின் உழைப்பில் வீட்டில் உட்கார்ந்து தின்னும் சோம்பேறிக் கணவனுக்கு அவள் 'கற்பு' மீது சந்தேகம் வந்துவிட்டது. விசயம் பஞ்சாயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. 'கற்பை நிரூபிக்க', சங்கீதா தன் கையின் மேல் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டைச் சுமந்தார். (பார்க்க: படம்). கையில் உள்ள தோல் உரியாததால் கற்புக்கரசி என்று அறிவிக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் கற்பழிப்புச் சம்பவம் நடந்த சில நாளிலேயே பெண்கள் ஆர்ப்பாட்டம் நடந்து - நாடு முழுக்க எதிர்ப்பு தெரிவித்தார்கள். உச்சநீதிமன்றம் தானாகவே ஐ.ஜி.க்கு ஆணையிட்டுச் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்யச் சொன்னது. அந்த வட்டார இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்டு உள்ளே தள்ளப்பட்டார்.

இங்கே பெண்கள் அமைப்புகள் போராடிய பின் 'குற்றவாளிகள்' கைது செய்யப்பட்டு உடனே விடுவிக்கப்பட்டு விட்டனர். நடத்தையில் சந்தேகப்பட்டு பெண்டாட்டியை உயிரோடு கொளுத்திய ராமன்தான் தேசிய நாயகன் என்று கொண்டாடும் ஆட்சியில் சங்கீதா காய்ச்சிய இரும்புத் துண்டுச் சோதனையோடு தப்பித்து விட்டதே அதிசயம்.

பாகிஸ்தானில் போலீசு அதிகாரி கைது, இந்தியாவில் குற்றவாளிக்கு ஜாமீன்! என்ன செய்வது, அது இசுலாமியச் சர்வாதிகாரம். நம்மூரில் இந்து ஜனநாயகம்!

● குப்பண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

## உழைக்கும் மக்களுக்கான விடுதலை - அரசியலைத் தெரிந்து கொள்ள, போராட ம.க.இ.க. அரசியல் உரைப்பேழைகள்

1. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்று நாட்டை மீண்டும் காலனியாக்கும் சதியை, கொடுமையைப் புரிய வைத்துக் கோபம் கொள்ள வைக்கும் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு உரைகள்...

**✱ நாட்டை மீண்டும் காலனியாக்காதே!**
*- தோழர் மருதையன்,*
தருமபுரி 2000-ஆம் ஆண்டு மே தின உரை.
இரு பாகம், விலை ரூ. 60.00

**✱ காலனியாதிக்கத்தின் புதிய வடிவம்**
*- தோழர் மருதையன்,*
2001-ஆம் ஆண்டு கோவை மாநாட்டு உரை.
இரு பாகம், விலை ரூ. 60.00

**✱ விவசாயத்தை அழிக்காதே**
*- தோழர் காளியப்பன், தோழர் சிவகாமு,*
திருவாரூர், 2002-ஆம் ஆண்டு மே தின உரை,
இருபாகம், விலை ரூ. 60.00

**✱ பொதுத்துறையைத் தனியாருக்கு விற்காதே**
*- தோழர் சுப. தங்கராசு, தோழர் அசோக்ராவ்,*
நெய்வேலி, 2002-ஆம் ஆண்டு மே தின உரை,
இரு பாகம், விலை ரூ. 60.00

**✱ கைத்தறி, விசைத்தறித் தொழில்களை அழிக்காதே!**
*- தோழர் சீனிவாசன், தோழர் அரசு,*
ஈரோடு, 2002-ஆம் ஆண்டு மே தின உரை,
இருபாகம், விலை ரூ. 60.00

2. குஜராத் முசுலீம் மக்கள் இனப்படுகொலையில் பெரும்பான்மை 'இந்துக்களின்' பொறுப்பென்ன? இந்த இனப்படுகொலைக்கும் இந்தியா மறுகாலனியாவதற்கும் உறவென்ன?

**✱ குஜராத் படுகொலையைக் கண்டித்து...**
*- தோழர் மருதையன்,*
பிப்ரவரி 2002, தஞ்சைப் பொதுக்கூட்ட உரை,
இரு பாகம், விலை ரூ. 60.00

3. உழைக்கும் மக்களுக்கும் சாதி - தீண்டாமைப் பிரச்சினைக்கும் உள்ள உறவும் - முரணும் தீர்வும் என்ன?

**✱ சாதி தீண்டாமை ஒழிப்பு**
*- தோழர் கதிரவன்,*
1996-ஆம் ஆண்டு உரை, விலை ரூ. 30.00

4. கம்யூனிசம் தோற்று விட்டதாய் சலிக்காமல் ஜெபிக்கப்படும் அவதூறுகளுக்கு என்ன பதில்?

**✱ கம்யூனிசமே வெல்லும்**
*- தோழர் காளியப்பன்,*
சீனப்புரட்சியின் 50-வது ஆண்டு நிறைவு விழா,
2000-ஆம் ஆண்டு தஞ்சைக் கருத்தரங்க உரை.
விலை ரூ. 30.00

5. தேர்தலைப் புறக்கணிக்கும் அரசியல் ஏன், மாற்று தீர்வாய் நாம் வைப்பது என்ன?

**✱ போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம். மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்.**
*- தோழர் காளியப்பன்,*
விலை ரூ. 30.00

ஒலிப்பேழை தேவைப்படுவோர் இரா. சீனிவாசன் பெயருக்கு வரைவோலை அல்லது பணவிடை அனுப்புக. தபால் செலவு தனி.

**புதிய கலாச்சாரம்,**
**18, முல்லை நகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை,**
**அசோக்நகர், சென்னை - 83,**
**தொலைபேசி 3718706.**

# சந்தா செலுத்துங்கள் — அதுவே உங்கள் அன்பளிப்பு!

ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. போன்ற எமது அமைப்புகளின் சார்பில் நடத்தப்படும் புரட்சிகர மணவிழாக்களில் பல சிறப்பம்சங்கள் உண்டு. பெண்ணடிமைச் சின்னமான தாலி மறுப்பு, வரதட்சிணை மறுப்பு, சாதிய - பார்ப்பனச் சடங்குகள் மறுப்பு, சாதி மறுப்பு ஆகியவை அவற்றில் முக்கியமானவை. மணமக்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து நூல்களைத் தவிர வேறு அன்பளிப்புகளைப் பெறுவதில்லை என்ற மரபும் இம்மணவிழாக்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சென்ற ஜூன், 26-ம் தேதி தேவபாண்டலத்தில் நடைபெற்ற தோழர்கள் மணிமாறன் - மாலதி ஆகியோரின் மணவிழாவில் புதியதொரு அறிவிப்பை வெளியிட்டனர் அந்தத் தோழர்கள். "மணமக்களுக்கு அன்பளிப்பு தர விழைவோர், அதற்குப் பதிலாகப் **புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம்** இதழ்களுக்குச் சந்தா செலுத்தி, அவ்விதழ்களை வாங்கிப் படியுங்கள். அதுவே எங்கள் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பை வெளியிடும் முறையாக இருக்கட்டும்" என்றார்கள். ஏராளமானோர் சந்தாதாரர் ஆயினர்.

மக்கள் விடுதலைக்கான புரட்சிப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் தோழர்கள் மீது தாங்கள் கொண்டிருக்கும் அன்பை அவர்களது உறவினர்களும் நண்பர்களும் வெளிப்படுத்தும் முறையென்பது அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் 'மொய்' எழுதுவதோ பொருளுதவி செய்வதோ அல்ல; அவர்கள் ஈடுபட்டிருக்கும் புரட்சிப் பணியில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்வதுதான், அத்தகைய அன்பின் மிகச் சிறந்த வெளிப்பாடு, சந்தா செலுத்திப் புரட்சிகரப் பத்திரிக்கைகளை வாங்கிப் படிப்பதும், பரப்புவதும்கூட அத்தகையதுதான். தமது நண்பரின் மீது தாங்கள் கொண்டிருக்கும் தனிப்பட்ட அன்பும், சமூகத்தின் மீது கொள்ள வேண்டிய அக்கறையும் ஒன்றுபடும் புள்ளி இது. பின்பற்ற வேண்டிய சிறந்த முன்னுதாரணம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF
FOR INDIA UNDER No. 42847

www.padippakam.com



"தேர்தலில் நிற்பவர்கள் தங்கள் மீது ... ந்தக்
கணக்குகளையும் வாக்காளர்களுக்கு ...
உச்சநீதிமன்றம் கூறியதை அனைத்துக் ...
பாராளுமன்றத்தில் நிராகரித்துவிட்டன. இதற்கு மேல் என்ன ...
கிரிமினல் அரசியலைப் புரிந்துகொள்ள?

அண்ணன்கள், வள்ளல்கள், தளபதிகள் துணையுடன் தமிழகத்தை மொட்டையடித்த
ஜெயா - சசி கும்பலின் ஆட்சி கிரிமினல் அரசியலுக்கு ஒரு அத்தாட்சி.
அதன் வளர்ச்சி - இன்று போலீசார் வூடு புகுந்து கொள்ளையிடும் காட்சி.

அண்ணன்களின் ஆட்டத்திற்கும் அம்மாவின் கொட்டத்திற்கும்
அன்றே ஆப்பறைந்த பாடல் ஒலிப்பேழை.

## அண்ணன் வர்றாரு

விலை: ரூ. 35.00

கடந்த ஐந்தாண்டுகால ஆட்சியில் ஆருயிர்த் தோழிகள் அடித்த கொள்ளை
பல கோடி. திடீர் வளர்ப்பு மகனின் திடீர் திருமணம் திடீர்ப் பணத்தின் திமிரை
வெளிச்சம் போட்டுக் காட்டியது.

அடித்தக் கொள்ளையில் கப்பம் கட்டினார்கள் அதிகாரிகள்
மந்திரிகள் பந்தல் காலுக்கு குழிதோண்டினார்கள்
எச்சில் இலை எடுத்து நன்றி காட்டினார்கள் போலீசு அதிகாரிகள்
ஏழைப் பெண்களின் தாலியறுத்தத் தங்கத்தை மொய் எழுதினார்கள்
சாராய அதிபர்கள்

பழைய கதை என்கிறீர்களா? பழைய கதைதான், ஆனால் இப்போது
வளர்ப்பு மகன் மட்டும்தான் இல்லை. அதே அதிகாரிகள், அதே சாராய அதிபர்கள்,
அதே போலீசு, அதே உடன்பிறவாத் தோழிகள் - கேளுங்கள்...

## ஒரு கல்யாணக் கதை கேளு




விலை: ரூ. 30.00




விலை: ரூ. 35.00

## இருண்ட காலம்

மார்ச் 92-இல் வெளியிடப்பட்ட பாடல் ஒலிப்பேழை இது. பத்தாண்டுகள்
உருண்டோடிவிட்டன. காலம் உருண்டோடுவதால் காலம்
மாறிவிடுவதில்லை. ஜெயா மீண்டும் முதல்வர், அத்வானி இப்போது
துணைப் பிரதமர். தடாவுக்குப் பெயர் இன்று பொடா.
அன்றையப் பாடல்களைக் கேளுங்கள்
இன்றையப் போராட்டத்தின் அவசியம் புரியும்.

"டெல்லியிலே அத்வானி சென்னையிலே அல்லிராணி
ஆர்.எஸ்.எஸ் ஆட்டம் போடுதே போயசு தூபம் போடுதே"

"நானொரு பாப்பாத்தின்னு கோட்டையிலே சொன்னாளடா
அதை நாலுபேருக்கு தெரியும்படி நீயும் நானும் சொன்னா தடா
புலிகளுக்கு ஆதரவுன்னு தேர்தலிலே நின்னாளடா
இப்போ புலி வேட்டை வேட்டையின்னு பூனையோடு வந்தாளடா"

கிடைக்குமிடம்:
புதிய கலாச்சாரம்
இரா.சீனிவாசன்,
18, முல்லை நகர் வணிக வளாகம், 2வது நிழற்சாலை,
அசோக் நகர், சென்னை - 600083 ☎: 3718706

படிப்பகம்